ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2. |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹூ புரட்டாசி-மீ 24-உ (9—10—1932) | மலர் 24.


## நீங்கள் விரும்புவதென்ன?

### அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேறிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா? என்ற சந்தேகங்களுக்குத் தகுந்த விடைகளுடன் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

Read the

"SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan

Pattabhi Sitharamyya

& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.



## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்

"குடி அரசு"

ஈரோடு.



உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta.



## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413

Calcutta- (k)



## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ளூ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.


"குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை—கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவசெட்டி தெரு, அரிசிபாளயம்.

கொளும்பு.
சிவன் கோவில் மேற்குமடம் பருத்தித்துரை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி ராஜவீதி.


பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது

# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)!

கிடைக்குமிடம்:- "குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு


இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

# "சமதர்ம முரசு"

## பொதுவுடைமை வாழ்வில் தொழிலாளர் நிலைமை.

### வயிர் நிறைந்து வாழ்க்கை இனிப்பதொன்றேலட்சியம்.

(தோழர் A. இரத்தினசபாபதி)

(8)

ஆதியில் மனிதன் மிருகங்கள் பறவைகள் முதலியவற்றின் பச்சையூனை உண்டு, ஆடை கட்ட அறியாமலும், அமர்ந்திருக்கக்குடிசையுமில்லாமல் வாழ்ந்து வந்ததிலிருந்து சக்கிமுக்கிக் கல்லால் தீயுண்டு பண்ணக்கண்டு பிடித்ததுமுதல், ஏதோ தனது அறிவுக்கெட்டியமட்டில் பற்பல வாழ்க்கைச் சாதனங்களைக்கண்டு பிடித்து வாழ்க்கை முறைகளையும் சாதனங்களையும் சுலபப்படுத்திவாழவாரம்பித்து அம்முறையில் படிப்படியாயுயர்ந்து இன்று அதியாச்சரியகரமான காரியங்களைக் கணப்பொழுதில் செய்யும் நூதன யந்திரங்கள் பலவற்றின் உதவியால் பற்பலவிதமான சுகபோகங்களையும் அடைந்திருக்கிறான்.

இதைப்பற்றி கூறுமிடத்து 'உலகம் முன்னேறிவிட்டது. மக்கள் சுகமாக வாழ்கிறார்கள். வாழ்க்கைச் சிரமம் குறைந்துவிட்டது' எனபொதுப்படக்கூறினும் மக்கள் என்னும் மகுடத்தின் கீழ்வரப்பட்ட மனிதர்கள் எல்லோருடைய சிரமமும் தீர்ந்து சுகப்பட்டுவிட்டதாகக்கூறுவதற்கில்லை. நாகரீகமெனவும். அறிவியல் உலகமெனவும் அழைக்கப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் உலக மக்களில் பெரும்பகுதியினராகிய தொழிலாளிகள் கூலியாளர்கள், வேலைக்காரர்கள், விவசாயிகள் ஆகியோர் மிகுந்த அல்லலுடனுழன்றே தங்கள் காலத்தை கழிக்கிறார்கள் என்பது வெளிப்படை.

### தொழிலாளரின் பெருமை.

இன்றைய உலகில் யந்திரசாதனங்கள் பெருக்கடைந்திருக்கின்றன என்றால் அது தொழிலாளரின் உதவியன்னியில் நமக்குக்கிடைத்ததெனக் கூறமுடியுமா? இன்று அமெரிக்க ராக்பெல்லர்களும், மார்கன்களும், ஹென்றி போர்டுகளும் கோடீஸ்வரர்களாகவிருக்கின்றனரென்றால் அவர்கள் கோடீஸ்வரர்களானது அவர்களது தொழில்களால் அத்தொழில்களைச் செய்யும் தொழிலாளிகளால் எனக் கூறினால் இதை யார் இல்லையென்று மறுக்கமுடியும்? இந்த ராக்பெல்லர்களும், மார்கன்களும், போர்டுகளும் கார்னீஜிகளும் நினைத்தால் சாம்ராஜ்யங்களையும் விலைக்குவாங்க முடியுமென்பது உண்மைதான். ஆனால் அத்தகைய பெருநீதியை அவர்களுக்குத் திரட்டித்தந்தவர்கள், அவர்களிடம் தொழில் செய்யும் லட்சக்கணக்கான தொழிலாளர்களேயென்பதும் உண்மையன்றோ? இன்று நகரங்களில் வக்கீல்களும் வியாபாரிகளும், முதலாளிகளும் ஏனைய உயர்தர உத்தியோகஸ்தர்கள் தின்று கொழுப்பது இந்நாட்டின் ஏழுலட்சம் கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகள், பண்ணையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களின் உழைப்பினாலேயே என்பதை மறுப்பவர் யார்?

மேலும் உலக சரித்திரத்தை ஆராய்ந்தோமாயினும் கைத்தொழிலுக்கு ஆதரவு காட்டாத எந்த வல்லரசும் க்ஷீணதசையடைவதையும் கைத்தொழிலைக்கண்ணெனப்போற்றிய அரசாங்கங்கள் மிக உயர்ந்த நிலையை யெய்தி இருப்பதும் அச்சாத்திரங்களால் நாம் அறியப்பெறும் உண்மையன்றோ?

ஆம்! ஆம்!! உலகக்ஷேமமும் உலகத்தின் செல்வ நிலையும் தொழிலாளரின் கைகளில்தானிருக்கின்றன சுருக்கக்கூறினால் தொழிலாளர்களே உலகத்தை தாங்கியவர்கள் என்று கூறுவது மிகையாகாது. ஆனால் இன்றைய நிலைமையில் இவ்வளவு மதிப்பு வாய்ந்த தொழிலாளர்களின் நிலை எவ்வாறிருக்கிறது 'எல்லாவகைகளிலும் அவர்கள் அடிமைகள்' என்ற முறையில்தானிருக்கிறார்கள்.

மனிதனது தனிப்பட்டறைத்தொழில்கள் மறைந்து கூட்டுத்தொழில் ஆரம்பமாயிற்று. அதில் பலபுதிய யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வியந்திரங்கள் இன்னும் அதிக வசதிகளையுண்டுபண்ணின. அதிகமான வேலையைச்சுருக்கமான நேரத்தில் அவ்வியந்திரங்கள் செய்துகொடுத்தன. அவ்வளவில் நல்லதுதான் ஆனால் இந்த நலமும் லாபமும் யாருக்கு? தொழிலாளர்களுக்கா? அன்றன்று அவர்களைக்கசக்கிப்பிழிந்து வேலைபெறும் முதலாளிகளுக்கே!

நாளாவட்டத்தில் தொழிலாளி இயந்திரங்களுக்கு அடிமையானான். பின்னர் முதலாளிகளுக்கும் அடிமையானான்; இயந்திரங்களுடனும், முதலாளிகளுடனும், அவன் தொழிலை மேற்பார்க்கும் சில்லரை அதிகாரிகளுடனும் அவன் உழல வேண்டியவனானான். இறுதியில் இயந்திரங்கள் பல தொழிலாளர்களைத்தொழிற்சாலைகளுக்கு வெளியிலும் வேலையின்றி நிற்கவைத்தது.

இவ்வளவு அல்லல்களுக்கிடையால் இந்த ஏழைத்தொழிலாளி பெறும் சம்பளமோ அவனது குடும்ப வாழ்விற்குப்போதுமானதாயிருக்கவில்லை. அவனது சக்திக்கு மீறிய வேலையால் அவனது தேகம் அலட்டப்படுகிறது. அதைத்தீர்ப்பதாக எண்ணி அவன் மதுவருந்துகிறான். சம்பாத்தியத்தில் பெரும்பகுதி மதுவில் வீணாகிறது. இருக்க வசதியற்றவீடு, சுகாதாரத்திற்கு எதிர்மாறான அசுத்தக்காற்று, சாக்கடை நாற்றம், வறுமை, இவற்றின் பயனாய்ப்பிறக்கும் கொடிய நோய்கள், இதனாலேற்படும் மனக்கலக்கம், சதா அல்லல், அலட்டல், அழுகைக்குரல். இந்தத்தொழிலாளியின் கையில் கத்தியாலறுத்தால் இரத்தங்காண இரண்டு நிமிடங்களாகின்றன என்? தாராளமான இரத்த ஓட்டம் இல்லை இரத்தம் பெருகத்தக்க உணவுட்கொள்ள அவனுக்கு ஆசைதான், வழியும் தெரியும்! ஆனால் பொருளாதாரம் இடந்தரவில்லை.

அவனது பிள்ளைகளின் நிலைமையோ? அதுபெருங்கன்றாவி. இரத்தப்பசையற்றதாயின் உதரத்தில் தங்கிப்பிறந்த குழந்தை இயற்கையிலேயே பலவீனமாயிருக்கிறது. அத்துடன் வசதியற்ற வீடு, படுக்கை, உணவு, தாயினிடம் சீக்கிரம்பால் வற்றிவிடுகிறது, பசும்பால் வாங்கியருந்த பொருளாதாரம் இடந்தரவில்லை, உடைகளைச்சுத்தமாக வைத்துக்கொள்ள ஆசைதான், பொருளாதாரம் குறுக்கிட்டு வாட்டிவதைக்கிறது. வரவுபோதவில்லை, வைத்தியனுக்குக்கொடுக்கவே வரவுபற்றவில்லை. கடன்வாங்குகிறான், கடன் கொடுக்கும் பாபிகளின் படுமோசமோ சொல்லத்தேவையில்லை. 50 ரூபாய்கள் ஓர் தொழிலாளி கடன்வாங்குவானானால் வாய்தாத்தவறுதல்,நோய்வாய்ப்படுதல் வட்டிக்கு வட்டி கட்டுதல் என்ற இவையெல்லாம் கட்டி அவனை ஒரே அமுக்காய் அமுக்கிவிடுகின்றன. வீட்டிலிருக்கும் செப்புப்பாத்திரங்கள், துணிமணிகளெல்லாம் மார்வாடிக்கடைக்கு வருகின்றன. இவற்றின் உண்மையை உணரவேண்டுமாயின் தொழிலாளர் நிறைந்துள்ள இடங்களுக்குச் சென்று நமது நண்பர்கள் நேரில் பார்க்கட்டும், தான் இவ்விதக்கஷ்டத்திலிருப்பதையும் தான் அல்லும் பகலும் இயந்திரத்துடன் கிடந்துழல்வதையும், அந்த உழைப்பெல்லாம், அதன் பயனெல்லாம், அதன் லாபமெல்லாம் முதலாளியின் இருப்புப்பெட்டிக்கே போவதைத்தொழிலாளி அறிகிறான். மனம் சலிக்கிறான், இந்த நிலைக்குத்தொழிலாளி வரும்பொழுது அவனது மனவேதனை அவனால் சகிக்கவியலாததாய்ப்போகிறது.

அல்லும்பகலும் பாடுபட்டுப்பணம் தேடி முதலாளிகளின் பணப்பையை நிறைத்துவிட்டு இவர்கள் சொற்பகூலி பெறுகின்றார்கள். அதனையும் பிடுங்குவதற்கு வீட்டு வாடகைக்காரன், சில்லரை வியாபாரி, வைத்தியன், வட்டிக்கடைக்காரன் முதலியோர் காத்திருக்கின்றனர். ஆனால் அந்தோ! அந்த பரிதாபகரம் நிறைந்த ஏழைத்தொழிலாளி போகும்கதிதானென்ன? மனச்சலிப்படைந்து தங்களின் உரிமைகளைப்பாதுகாத்துக்கொள்வதற்காக கட்டுப்பாடாக நின்று முதலாளிகளை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்யத்தொடங்கினார்கள். தங்களுக்கென சங்கங்கள் அமைத்தார்கள். கொதிப்படைந்திருக்கும் அவர்களது உள்ளத்தின் தன்மையால் இந்த வேலை நிறுத்தம் நடந்த பலவிடங்களில் அடிதடியும் ஏற்பட்டன. இவற்றுள் யந்திரமுற்போக்கால் தங்கள் வயிற்றுப்பிழைப்பில் எந்த நிமிஷத்தில் மண் விழுந்துவிடுமோ என்றும் இவர்கள் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்க வேண்டியதிருக்கிறது. இத்தகைய நிலைமையில்தான் இன்றைய தொழிலாளிகள் அதாவது உலக மக்களில் 100-க்கு 99 பேர் இருக்கிறார்கள்.

### பொதுவுடைமைவாழ்வில்

தொழிலாளர்களது நிலைமை எவ்வாறிருக்கும், அல்லது எவ்வாறிருத்தல்வேண்டும் என்பதை ஈண்டுச் சற்று விளக்குவாம். இன்று நாம் ஓர் தொழிலாளியை நோக்கி 'உனக்கு வேண்டுவதென்ன?' எனக் கேட்போமாயின் 'வயிற்றுக்குச் சோறுவேண்டும்' என்றபதில்தான் முதல் முதலில் நமக்குக்கிடைக்கிறது.

தொழிலாளி தனது அறிவிற்கும் தேக நிலைமைக்கும் ஏற்றவாறு தொழில்செய்தல் வேண்டும். அவன் செய்யும் தொழில் எந்த ஒரு முதலாளியின் நன்மைக்கென்றாயினும் முதலாளிகளின் நன்மைக்கென்றேனுமிருத்தல் கூடாது. ஆனால் அவன் செய்யும் தொழில் நாட்டின் நன்மைக்கென்றேயிருக்கவேண்டும்.

இம்முறை தொழிலாளிகளுக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவரும் செய்யும் ஒவ்வொரு காரியமும் நாட்டின் நன்மைக்கு என்றுதானிருக்கவேண்டுமேயன்றி வேறெவ்வித நோக்கத்துடனுமிருத்தல்கூடாது. தான் செய்யும் எந்த ஒரு பெரியவேலையும் அல்லது சிறியவேலையும் நாட்டின் நன்மைக்கே என ஒவ்வொருவனும் எண்ணும்பொழுது நாட்டின் க்ஷேமத்தில் அல்லது நாட்டின் நிர்வாகத்தில் தனக்கும் உரிமையும் கடமையுமிருக்கிறதென ஒவ்வொரு மனிதனும் உணரவாரம்பிக்கிறான். இந்த எண்ணந்தான் ஒரு நாட்டின் முற்போக்கிற்கு முதல்படியாகும்.

'தன்னாலியன்ற வேலையைச் செய்வது' என்ற ஒன்றைத்தவிர தொழிலாளிக்கு வேறெவ்வித கவலையுமிருத்தல் கூடாது. அவர்களின்

### உணவு.

சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒரே தன்மை காணப்படவேண்டும். உதார

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# தீண்டாமை ஒழிக்க தீவிரம்!

## வெறுங்கிளர்ச்சி—முயற்சியல்ல.

### "ஹரி" ஜனங்களே உஷார்.

(C. S.)

மகாத்மாவின் விரத மகாத்மியம் பண்டை ஆரிய தர்மப்படி, கடல்தாண்ட மறுத்து விட்டபோதிலும், பூனா ஒப்பந்தத்தை கூட்டி முடித்தது என்பதை பலரும் ஒப்புக்கொள்வர். பூனா ஒப்பந்தத்தை பின்பற்றி நம்நாட்டில் தீண்டாமையை ஒழிக்க பெரும் முயற்சி செய்யப்படுகிறது. அம்முயற்சியின் தன்மையையும், முறையையும் சற்று விளக்கி அது கோரிய பலனை அளிக்குமோ? என்பதை ஆராய்வாம்.

தீண்டாமை விலக்கு பிரசாரம் செய்ய ஓர் மத்தியசபை அமைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அச்சபைக்கு செல்வச்சீமான் ஜி. டி. பிர்லா தலைவராய் இருப்பார். இந்திய ஊழிய சங்கத்தைச்சேர்ந்த திரு. ஏ. வி. தாக்கர் காரியதரிசியாவார். இச்சங்கத்திற்கு இருபது லட்சம் ரூபாய்கள் மூலதனம். வருட வருமானம் ரூ. 10000. இச்சங்கத்திற்கு ஒரு முஸ்லீம் சிற்றரசர் ஆதரவும் கிடைத்துள்ளது.

இச்சங்கத்தின் ஆரம்பவிழா சென்ற மாதம் 30-ந்தேதி பம்பாய் நகரில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு வைதீக சீர்திருத்தக்கார—இந்து—தேசிய—தலைவர் பண்டிதர் மதன்மோக மாளவியா தலைமை வகித்தார். அவர் தலைமையுரையை யாவரும் ஒருமுறைக்கு இருமுறை வாசித்து உய்த்து உணருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

'நமது சாஸ்திரங்கள் தீண்டாமையை சிறிதும் ஆதரிக்கவில்லை. சாத்திரங்களின் உட்கருத்தை நன்றாய் உணராதவர்களே தீண்டாமை சாஸ்திர சம்மதமானது என்றுகூறக்கூடும்.

தன்னுடன் சேரும் உபநதிகளின் அசுத்தத்தை அகற்றி, நீரை தெளியச் செய்யும் கங்கா நதியைப்போல் தேவ ஆலயங்கள் தன்னுள்வரும் தீண்டாதார்களை புனிதர்களாக்கும்.'

என்பது திரு. மாளவியா கூற்று.

எக்காலத்திலோ, எக்காரணத்திற்கோ, எவரோ எழுதிய நூல்களில் தீண்டாமைக்கு இடமில்லை என்று கூற பண்டிதர் முன்வந்தது என்? அதன் உட்கருத்து இப்படி இருந்தால் என்? அப்படி இருந்தால் என்? தீண்டாமை வேத சார்புடைத்து எனினும், அதை ஒழிக்கவேண்டும் என்றே அறிஞர் கூறவேண்டும்! திரு. மாளவியா தீண்டாமைக்கு சாத்திரங்களில் ஆதாரமில்லை என்று கூறுவதை சற்று உயர் குலத்தினர் இப்பொழுது தீண்டாமையைவிட்டு விட்டு பின் ஒருக்கால் மற்றொரு பண்டிதர் மணி தீண்டாமை சாஸ்திரீதியானது என்று சொல்வதை நம்பி தீண்டாமையை உயிர்ப்பித்து விட்டால் தாழ்த்தப்பட்ட மக்கள் கதி என்னாவது? 5-கோடி மக்களின் தம் மனித உரிமைகளுக்கு சாத்திர குப்பைகளின் உட்கருத்தையும், வெளிக்கருத்தையுமோ நம்பி நிற்பது? சாத்திரங்களின் கோட்பாடுகள் எத்தன்மைத்தாயினும் தீண்டாமையின் கொடுமையை உணர்ந்து அதற்காளாகும் ஏழை மக்களின் துயரத்தைக்கண்டு, மனிதன் என்ற முறையில் அதை ஒழிக்க பண்டிதமாளவியா முன்வர அஞ்சுகிறார். அறிவிற்கு ஏற்ற ஓர் சீர்திருத்தத்திற்கு சாஸ்திரங்களில் இடம் உண்டா? இல்லையா என்று ஆராய்வதாகிய ஊத்தக்குழியிலே பண்டிதர் போன்றார் உழலும்வரை தீண்டாமை ஒழிவது எங்கனம்? 5-கோடி மக்கள் மனிதராவது எங்கனம்? 35-கோடி மக்கள் விடுதலை அடைவது எங்கனம்?

பின்னர் திரு. மாளவியா கங்கா நதியையும், தேவஆலயங்களையும் ஒப்பிடுகிறார். இந்த உபமான உபமேயத்தின் தத்துவத்தை நான் அறிந்துகொள்ள முடியவில்லை. கங்கா நதியின் தூய்மை உலகப்பிரசித்தம். ஆகவே அதைவிடுத்து மேற் செல்வோம்.

இயற்கையிலேயே, பிறவியிலேயே தீண்டாமை உண்டு என்பது பண்டிதரின் மூலக்கொள்கை. ஆகவே தம் தீண்டாமையை அகற்ற ஆலயப் பிரவேசம் செய்யவேண்டும் என்று ஒரு புறம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அறிவுறுத்தலும் மற்றொருபுறம் அம்முயற்சிக்கு துணை செய்யுமாறு மேற் குலத்தவர்களுக்கு வேண்டுகோளும் அவர் பிரசங்கத்தில் மிளிர்வதை காண்க. இத்தகைய முயற்சி தீண்டாமையை போக்காது என்பது மட்டும் அன்று. தீண்டாமையை நீக்க வழியே இல்லாது செய்துவிடும் என்பதை யாவரும் உணர்வார்களாக.

தென்னாட்டு கோவில்களை விபசாரக்களங்கள் என்று காந்தி அடிகள் கூறினார். வடநாட்டு ஆலயங்களில் தெய்வம்இல்லையென்று தென்னாட்டு தெய்வீக பக்தர்கள் கூறுகிறார்கள். இந்நிலையில் ஆலயப்பிரவேசப்பிரசாரம்செய்யபண்டிதர்முன்வந்தது என்? ஆலயப் பிரவேசம் செய்யவில்லையாயின் தீண்டாதமக்கள் தீண்டாத மக்களே போலும்! ஆலயங்களால் நீக்கவேண்டிய தீண்டாதாரின் குறைகள்தான் என்ன! அவர்களிடம் பண்டிதர்காணும் தனிப்பாபத்தன்மைதான் யாது? அவற்றை ஆலயங்கள் எவ்வாறு நீக்கும்? இக்கேள்விகளுக்கு பண்டிதர் உரையில் விடையில்லை. ஆலயங்களிலேயே பிறந்து ஆலயங்களிலே வளர்ந்து ஆலயங்களிலே இறந்துவரும் 'மேன் குலத்தினர் வாழ்க்கையை தூய்மை செய்யாத ஆலயங்களோ, தீண்டப்படாத மக்களை புனிதர்களாக்கும்? தேவ ஆலயங்கள் உய்யவே, தேவஸ்தான சட்டங்கள் ஏற்படும். இக்காலத்தில் கடவுள் உணவை கமிஷனர்கள் மேற்பார்வை செய்யும்இக்காலத்தில், தர்மபாகங்கள் எல்லாம் தாயபாகமாக விளங்கும் இக்காலத்தில், திருப்பணி மாடுகள் பண்ணைக்கு அரும்பணிசெய்யும் இக்காலத்தில், தேர் கால்கள் எல்லாம் பந்தல் கால்களாக நிற்கும் இக்காலத்தில், திருவாபரணங்கள் எல்லாம் டிரஸ்டிகள் வீட்டு அணிகலன்களாக நிற்கும் இக்காலத்தில் நாயகர் கோவிலை தந்தை கொள்ளையிட, நாச்சியார் கோவிலை தமையன் சூறையிடும் இக்காலத்தில், தேவிக்குச்சாத்திய பட்டாடை தாசிக்கு ஏற்ற சித்தாடையாக மாறும் இக்காலத்தில், உணர்வு கெட்ட பிள்ளையும், ஒழுக்கம்கெட்ட அய்யரும் ஆலய நிர்வாகத்திற்கு அல்லல்படும் இக்காலத்தில்,கோவில்களின்மகிமையைப்பாடுவது அறியாமைதானே

பண்டிதரை பின்பற்றி தீண்டாமையை அகற்றுவது என்பது பகற்கனவாகவே முடியும். முதலில் தீண்டாமை பிறவியால் உண்டுஎன ஒப்பவேண்டும். இரண்டு, சாத்திரத்தை ஒட்டி அதைஒழிக்கமுயற்சி செய்யவேண்டும். மூன்று முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ என்றுபின்னர் நம்பவேண்டும். பண்டிதர் படிப்படியாக இறங்கி படுகுழியில் விழ்வதைக்காண்க! ஒருக்கால் தேவாலயங்களால் தீண்டப்படாமக்கள் தூய்மை உறினும், அதை உயர் குலத்தினர் ஒப்புமாறு நிரூபிப்பது எங்கனம்? தெய்வத்தால் ஆகாதெனினும், இக்கொடுமையை ஒழிப்பது மக்கள்கடமை என்பதை பண்டிதர் உணரவில்லை. தீண்டாமை என்னும் அறிவிற்கு ஒவ்வாத, அநீதி நிறைந்த, அதர்மத்தை போக்க, சாத்திரங்களின் ஆதாரத்தையும், கோவில் உரிமையும் கடவுள் கருணையும் எதிர்பார்த்திருந்தால் இலவுகாத்த கிளியாவோம் என்பது உறுதி.

தீண்டப்படாத மக்கள் முன்னேற்றத்திற்கு முதற்படியாக அவர்களுக்கு ஹரி ஜனங்கள் என்றுபெயர் சூட்டப்பட்டுவருகிறது. ஒருகாணி நிலம் இல்லாதவர்களுக்கு அரசர்பட்டம் வழங்கும் அரசாங்கத்தைப்போலவும், அறிவு என்பது சிறிதும்அற்றவர்களுக்கு அறிஞர் (டாக்டர்) பட்டம்சூட்டும், பல்கலைக்கழகம் போலும், சனாதன தர்மத்திற்கே புறம்பானவர்களும், ஹரிஹரன்களால் ஒதுக்கி ஒடுக்கப்பட்டவர்களுமான தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'ஹரிஜன' என்று திருநாமம்இட காந்திமுன்வந்தது இக்கால விநோதமே! ஒருக்கால் அப்பெயர் அவ்வகுப்பாருக்கு பொருந்துவதாக கொள்ளின், பிர்மபுத்திரர்களாக பிராமணர்களுக்கே சைவஆலயங்களில் உரிமை இல்லை. என்றுசொல்லவும் சைவ வேளாளர்கள், ஹரிஜனங்களுக்கு சிவ ஆலயங்களில் இடமேது என்று கூறலாம் அன்றோ! பிறகு சைவர்களைப்பின்பற்றி "சிவஜனங்கள் உலகில் இல்லாதபோது ஹரி ஜனங்கள் எப்படி திடீரென தோன்றினர்? அவர்கள் அயோனிகர்களோ" என்று வைணவர்கள் கூறலாம். ஆகவே இப்புதுப்பெயர் சூட்டுவதால் பலன் ஒன்றும் விளையாது. காந்தி—மாளவியா செய்கைகள் கிளர்ச்சியாகுமே அன்றி முயற்சிஆகா. அஞ்ஞானக்கண்கொண்டு, அறிவிற்கு ஒவ்வா வழியில் சென்றால் கோரியபலன் கிட்டாதென்பது திண்ணம். இந்தத் தண்ணியில் அந்தப்பருப்புவேகாது.

தாழ்த்தப்பட்ட சகோதரர்களே! உங்களை இப்பொழுது சூழ்ந்துவரும் புதிய ஆபத்தை உற்றுஉணருங்கள்! நீங்கள் வேண்டுவது என்ன? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு. ஆலயப்பிரவேசமும், ஆண்டவன் அருட்கருணையும் இவற்றை உங்களுக்கு அளிக்கவல்லதோ? நீங்கள் என் ஊர்புறங்களில் கையது கொண்டு மெய்யது பொத்தி, பனியால் நனைந்து வெய்யிலால் வாடுவதேன்? தொழுநோயராய் ஆவரித்து தின்றுழலும் புலையர்கள் அந்தணர்களில் இல்லையோ? வேளாளர்களில் இல்லையோ? அன்னார் பட்டங்கள் பெறவில்லையா? பதவிகள் அடையவில்லையா? உத்தியான வனங்களில் உலவ இல்லையோ? ஊர்குளங்களில் நீராடவில்லையோ? வயிற்றுக்கொடுமையால் ஆட்டைமாட்டை பிடுங்கித்தின்னும் உங்களை மட்டும் தூற்றுவானேன்? சண்டாளன் எனச்சொல்வானேன்? சாதிகெட்ட நாயே! எனச்சாற்றுவானேன்? உங்கள் வறுமை! வறுமை!! வறுமை!!! இவ்வறுமை எப்படித் தோன்றிற்று,? எவ்வாறு, வளர்ந்தது? இன்று என் நிற்கிறது? உயர்குலமக்கள் கல்வித்திறனால்,! சாதி இறுமாப்பால்! செல்வச்செறுக்கால்! அந்தோ நீங்கள் கொடுமைக்கு இரையாகிவிட்டீர்கள். அவற்றை புதிய அரசியல் உரிமைகளைக்கொண்டு, சட்டமுறையில் நீக்க உளம்கொள்ளுங்கள். அது பயன் பெறுவிடின் ஆள்வலியால், உடல்வலியால் சாதிப்போம் என்று எச்சரிக்கைசெய்யுங்கள்! வெற்றி உங்களுடையது.

இம்முறையை விட்டு கொக்குத் தலையில் வெண்ணை வைத்துப்பிடிக்கும் காந்தி—மாளவியா முறையை நீங்கள் கைக்கொண்டால் முன்னேற்றத்திற்கு வழியேஇல்லை என்பதை உய்த்துணருங்கள்!

# இராமலிங்க சுவாமிகளின் கதியென்ன?

## வைதீகக்கொலைகாரர்கள்.

### இராமலிங்கசுவாமிகள் வைதீகர்களால் கொலை செய்யப்பட்டிருப்பாரா?

### திரு. முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி., எல்., அவர்களின் பிரசங்கம்.

சென்ற 2—10—32-ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு, தொண்டமண்டலம் துளுவவேளாளர் உயர்தரப்பாடசாலையில் இராமலிங்கசுவாமிகளின் 110-வது பிறந்ததின விழாவில் தேவஸ்தான போர்டு கமிஷனர் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையில், திரு. முத்துச்சாமிவல்லத்தரசு அவர்கள் செய்த பிரசங்கம் வருமாறு:—

தாயினும் அருமைத்தயவுடைத் தலைவீர்! கொழுந்தேனும், செழும் பாகும், பசும்பாலும் கலந்து உண்டாற்போல் குணங்கொண்ட இயற்கை உண்மைத்தோழர்களே! வீரம் செறிந்த செந்தமிழ்நாடாகிய இந்நாட்டில் பல்லாண்டுகளாக பிளவையும், பிரிவையும், வேற்றுமையையும் உண்டுபண்ணும் சாதிமத சாத்திரங்கள் வாய்ப்பட்டு தனது விடுதலையுமிழந்து, மக்கள் முன்னேற்றம் கெட்டு, நாடு தீராத நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றதைக் கண்டு வருகிறோம். இந்நோயை நாட்டைவிட்டுப் போக்குவதற்கென்றே இக்காலத்தில் திரு. காந்தி போன்றவர்களும் பட்டினி கிடந்து கடுந்தவம் இருந்துவருகிறார்கள். இம்மாதிரியான கொள்கைகள் அமைந்த தியாகச் செய்கைகள் சென்ற பல நூற்றாண்டுகளாகவே நமது தமிழ் நாட்டில் தோன்றி வந்திருக்கின்றன. நம் தமிழ் மக்களில் மிகுந்த தியாக புத்தியை உடைய பெரியாராகிய இராமலிங்க அடிகளினது நூற்றுப்பத்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடி, அப்பெரியார் தம் வாழ்வையும் பாடல்களையும் பாராட்டும் நோக்கத்துடன் இங்கு கூடியுள்ள இக்கூட்டத்தில் பேசும்படியான ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது பற்றிப் பெரிதும் மகிழ்கிறேன். இவ்விழாக்கூட்டத்தில் நான் பேசப்போகிறேன் என்னும் செய்தியை அறிந்த நண்பர்கள் பலர் சிறிது மனத்தில் துணுக்குற்றார்கள். அப்படித் துணுக்குறுதற்குச் சிறிதும் காரணமே கிடையாது. ஏனெனில் இராமலிங்கப் பெரியார் உரைத்த மொழிகளின் படியே, "பொய்யாதவாய்மைகளைப் புகன்றிடவேண்டும், புகன்றபடி புரிந்திடல்வேண்டும்" என்றதற்கேற்ப என்மனத்திற்கு, எது உண்மையெனத் தோன்றுகிறதோ அதைத்தான் வெளியிடுவேன். ஆங்கிலத்தில், "There is no vice that doth so cover a man with shame as to be found false and perfidious" என்றுள்ள பேருரைக்கேற்ப உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேச என்னால் முடியாது.

தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டிற்கும் இகழ்ச்சியை உண்டாக்கக் கூடியவர், எவராயிருந்தாலும் சரி, அவர்களால் கொண்டுவரப்படும் இயக்கத்தின் குணம் எவ்விதமாயிருந்தாலும் சரி, அவைகளை அழிக்கும்ஆண்மையை உடைய ஒரு அடியேன் என்றே என்னை நான் சொல்லிக் கொள்ளுவேன். "தமிழன்" என்ற ஒரு முறையில் தமிழர் சமூகம் கடைத்தேறும் மார்க்கத்தைக்காட்டியஇராமலிங்கப்பெரியாரின் சீர்திருத்த மொழிகளில் நம்பிக்கைகொண்டதனால்தான் நான் இங்கு பேச முன்வந்தேன்.

இராமலிங்கப்பெரியாரின் மொழி வன்மையையும், "பக்தி"க்கடலையும் பற்றிப் பலர் பேசினார்கள். அப்பெரியார் 19-வது நூற்றாண்டின் முதற் பாதியில், அதாவது, 1823ல் பிறந்து 54 வருடகாலம் உலகிலிருந்து மறைந்தார். அவர் தன் ஆயுட்காலத்தில் பெரும் பகுதியாகிய சுமார் 45 ஆண்டுகளை சிவ பக்தராகவும், சாதி, சமயம், மதம் இவைகளில் அளவுக்கு மிஞ்சின நம்பிக்கையுடையவராகவும் இருந்து வந்தாரேயொழிய உலக நன்மையைக் கருதிவேறு ஒன்றும் செய்ததாகத்தெரியவில்லை. வயது ஆக ஆக பகுத்தறிவும், சுய உணர்ச்சியும் வளர அக்காலத்துள்ள பாமர மக்களின் நிலைமையையும், சமயக்கொள்கைகளின் பொய்யான தன்மையையும் ஆராய்ந்தார். அதன் பின்னர் "சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி, நேத்திரங்கள்போல் காட்ட நேராதோ' என்று பாடி சமய பக்தர்களைப்பற்றி "படியளவு சாம்பலைப் பூசி சைவம் பழுத்த பழமோ பூசணிப்பழமோவெனக் கருங்கல்லுபோலும் அசையாது பாழாகுகின்றீர்" எனக்கண்டித்தார்.

அக்காலத்தில் அவர் மொழிப்படியே பெரும்பாலும் மக்களினுடைய வாழ்க்கை "உடுக்க ஓர் கந்தைக்கு மேலில்லை, உண்ணவோ, உணவுக்கு வழியில்லை, படுக்கவோ பழம் பாய்க்கும் கதியில்லை" என்ற மாதிரியாகவே இருந்தது. அக்காலத்திலிருந்த கல்வியிலும், சாத்திரத்திலும், மதத்திலும், நம்பிக்கை முழுதும் இழந்து "சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன் சாத்திரக்குப்பையைத்தவிர்ந்தேன்" என்று உலகத்தார்க்கு அறிவுறுத்தினர்.

இம்மாதிரியாக 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் சமயத்துக்கு விரோதமாக நவின்றாரென்றால், மதப்பித்தர்களால் அப்பொழுது அவருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டம் அதிகமாய் இருந்திருக்க வேண்டும். சமரசக் கல்வியும், நாகரீக வளர்ச்சியும், பாதுகாப்பும் பெருகிய இந்த 1932-ம் வருஷத்தில், சாதிமதக் கொடுமைகளைப்பற்றி யாரும் பேசப்புகுந்தால், மதப்பித்தர்களிடமிருந்து எவ்விதக் கொடுமையான எதிர்ப்பும், விரோதமும், உண்டாவதை அறிந்த நாம், மநுதர்ம சாஸ்திரமும், மநுநீதியும், சமய வழக்கும் மேம்பட்டிருந்த 1850-ம் வருஷ வாக்கிலே சீர்திருத்த முறையைக்கைக்கொண்ட நமது பெரியாருக்கு என்னென்ன விரோதங்கள் ஏற்பட்டிருக்குமென்பதை நீங்கள் எல்லோரும் யூகித்துக் கொள்ளவேண்டியது தான். கஷ்டம் பொருக்க முடியாத நிலைமையில்தான் "படமுடியாது இனித்துயரம்" என்றும் கதறுகிறார். ஆனால் பகுத்தறிவின் பெருக்கத்தினால் எதிர்ப்பை ஒரு பொருட் படுத்தாமல் "கண்டதெல்லாம் அனித்தியமே கேட்டதெல்லாம் பழுதே கற்றதெல்லாம் பொய்யே நீர் களித்ததெல்லாம் வீணே உலகியலீர்! இதுவரை உண்மை அறிந்திலீரே" என்று இயம்பி,

"விடமாட்டேன் இனி ஏமாந்து விடமாட்டேன் கண்டீர், கெடமாட்டேன் பிறர்மொழி கேட்டிடவுமாட்டேன்" என்று மார்புதட்டி மதப்பித்தர்கள் அஞ்சும்படியாக,

"துன்பந்தவிர்ந்தேன்என்று ஊது ஊது சங்கே, அச்சத்தைத்தவிர்த்தேன் என்று ஊது ஊது சங்கே, எல்லாம் வல்ல செயவல்லேன்என்று ஊது ஊது சங்கே" என்று ஜெய பேரிகை முழங்கினர்.

இவ்விதமாக சாதியும், மதமும், சமயமும் பொய்யென்று உணர்த்தி, மார்க்கமெலாம் ஒன்றாகும் வாய்மையை, அஞ்சா நெஞ்சத்துடன் அக்காலத்தில், அதாவது சாதிக்கொடுமை பெருத்தும், சமயவாதம் முற்றிச் சமணர்களைச் சைவர்கள் கழுவேற்றி இரத்தத்தைக்கண்டு களிக்கூத்தாடின காலத்திலே இராமலிங்க அடிகள் மேற்கண்ட சீர்திருத்த மொழிகளைப் புகன்றால் அப்பெரியாரை வைதீக வெறியர்கள் கொன்றிருக்க வேண்டும் என்று யூகிக்க இடமிருக்கிறதே ஒழிய, அவர் சோதியில் மறைந்து விட்டதாகவும், சமாதியில் இறங்கிவிட்டதாகவும் சொல்லக்கூடிய வரலாற்றை நம்ப போதிய ஆதாரமில்லை.

என்று பேசிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் திரு. ஆ. சண்முகம் பிள்ளை என்பவர் திருவருட்பா புத்தகம் ஒன்றை விபூதியாலும் சந்தனத்தாலும் பொட்டிட்டு, பூமாலை சூட்டி அதைக் கையில் ஏந்திய வண்ணமாய் எழுந்து தலைவர் அனுமதியின்றி "அவ்வாறு சொல்லுவது அபசாரம். அதனால் சில பக்தர்களுக்கு மனம் புண்படுகிறது" என்று சொல்லிக் குறுக்கிட்டார். தலைவரவர்கள் 'ஒவ்வொருவரும் அவரவர்கள் கொண்ட அபிப்பிராயத்தைச் சொல்லுவதற்கு உரிமையுண்டு. உங்களுடைய கொள்கையை அது இகழ்ந்ததாக ஆகாது' என்று சொல்லி அமர்த்தினர்.

அதற்குள் இன்னொருவர் 'அவர் சுயமரியாதைக்காரர்' என்றுகூறினர். இதற்குள் கூட்டத்தில் சிறிது குழப்பம் உண்டாகியது. பெரும்பாலோர் 'திரு. வல்லத்தரசு அவர்கள் சொல்வதை இன்னதென்று அறிவதற்குள் ஏன் இந்த பக்தர் முழக்கம்' என்று கூறிச்சபையில் அமைதியை உண்டாக்கினார்கள். மேற்கண்ட ஒன்றிரண்டு 'அடியார்' களைத்தவிர சபையில் ஒருவித எதிர்ப்பும் இல்லை.

தலைவர் வேண்டுகோளுக்கு இணங்க திரு. வல்லத்தரசு தமது சொற்பொழிவைத்தொடர்ந்து மேலும் பேசியதாவது:—

தமிழ்மொழியும், தமிழர் சமூகமும் எக்காலத்தில் உண்டானவைகள் என்று வரையறுக்கக்கூடாத தன்மையையுடைய நம் தமிழ்நாட்டு மக்களாகிய நாம் இன்று இருக்கக்கூடிய ஒரு உதவியற்ற அடிமையான நிலைமையைக் கவனிக்கும்போது நமது வாழ்வில் ஒரு சிறிதும் சுயமரியாதை உணர்ச்சியின்றிப் பிறர்க்குத் தொண்டுபுரிந்து வயிறுவளர்க்கும் நிலைமையில் இருப்பதைக்காண்கிறோம். ஏனெனில் விஞ்ஞான முறைகளிலும், சீர்திருத்த உணர்ச்சியிலும் ஈடுபட்டுள்ள மக்களும் கல்வியும் இல்லாத குறையே முக்கிய காரணமாகும். நமது தமிழர்களுக்குள் இருக்கும் சாதி மதக்கொடுமைகளால்தான் பௌத்த மதமும் சமண மதமும் தோன்றி ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை வேறுபடுத்தின. அன்னிய மதங்களான கிறிஸ்துவ மதம், இஸ்லாம் மதம், இரண்டும் கோடிக்கணக்கான நமது மக்களை ஆட்கொண்டன. இம்மாதிரியான கொடுந்துன்ப நிலையைக்காணப்பொறுதவராம் நமது பெரியார் ஜீவகாருண்யம் என்ற ஒன்றையே கடைப்பிடித்து 'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தார் எவரும் எச்சார்புமாகி உயிர்க்கிதம்புரிதல்வேண்டும்' எனப்

# கோவில் சொத்தை என்ன செய்ய வேண்டும்?

## தோழர் குஞ்சிதம் பி. ஏ. எல். டி. சொற்பொழிவு.

சென்னை ஞானமந்திரத்தில் கூடிய கூட்டத்தில் தோழர். குஞ்சிதம் அவர்கள் பேசியதின் சாரம் பின் வருமாறு:—

தோழர்களே! இன்று நான் பேசுவதற்கு ஏற்பட்டுள்ள விஷயமாவது, "தென்னிந்திய கோவில்களை உண்மையான கலைக்கழகங்களாக்குவதற்குரிய முறைகள் யாவை?" என்பதாகும். இவ்விஷயத்தைக் குறிப்பிட்டிருப்பவர்கள் தென்னிந்தியாவிலுள்ள கோவில்களை மாத்திரம் ஏன் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. இதேமாதிரி "உண்மையான கலைக்கழகங்கள்" என்றிருப்பதற்குப்பதிலாக "மனித சமூகத்திற்கு எவ்விதத்தில் பயன்படுத்தலாம்" என்றிருந்தால் இன்னும் பரந்த எண்ணத்தோடு இருக்கும் என்பது எனது கருத்து.

ஆயினும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கேற்ப ஏதோ எனக்கு சரி என்று தோன்றிய சிலவற்றை சொல்லிப்போகலாம் என்றே கருதுகிறேன்.

நான் சொல்லப்போகும் விஷயங்கள் Jehorah சொன்னார், கிருஷ்ணபகவான் கீதையில் சொன்னார், முகமதுநபி திருவாய்மலர்ந்தருளினார், வசிஷ்டர் சொன்னார் என்று சொல்லி, நான் சொல்வதை நம்புங்கள் இல்லாவிட்டால் சாத்தான் பிடித்துக் கொள்வான், நரகத்தில் கொண்டு போய் தள்ளப்படுவீர்கள் என்று மதப்பிரச்சாரகர்கள் சொல்லுவதுபோல் சொல்லி உங்கள் அறிவுக்கண்ணைக் கட்டி ஏமாற்றிவிட்டுப்போக வரவில்லை. ஆனால், என் அறிவுக்குச் சரியென்று பட்டதை உங்கள் அறிவுக்கு முன் வைப்பதற்கே வந்துள்ளேன். ஆகையால் தோழர்கள் அனைவரும் மதவெறி, ஜாதிவெறி முதலியவைகளை நீக்கி மனிதனென்ற முறையில் பகுத்தறிவோடு ஆராய்ந்து பார்த்து சரியென்று தோன்றுவதை ஒப்புக்கொண்டு, தப்பு என்று தோன்றுவதை தள்ளிவிட உங்களுக்கு முழு உரிமையுமுண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "மதவெறி" என்று ஏன் குறிப்பிட்டேன் என்றால் அது மனிதனுக்கு Opium "அதாவது" அபின் என்பதே எனது கருத்து இதை நிரூபிக்க லக்ஷக்கணக்கான உதாரணங்கள் கூறமுடியும். அதற்கு இது சமயமல்ல வேறொரு சந்தர்ப்பத்தில் எடுத்துக்கொள்வோம். நிற்க,

நம் நாட்டுக்கோவில்கள் (ஹிந்துக் கோவில்கள்) அதிலும் முக்கியமாக தென்னாட்டுக்கோவில்கள் இன்று எந்த நிலையில் இருக்கின்றன என்பதை கவனிப்போம். முதலாவது—அவைகள் ஒரு ஜாதி அதாவது மேல் ஜாதி, பிர்மாவின் முகத்திலிருந்து பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு ஜாதியார், நகத்தில் அழுக்குப்படாமல் உயிர்வளர்ப்பதற்கு உபயோகப்படுகின்றன.

இரண்டாவதாக கோடிக்கணக்கான பணத்தை சிறுகுழவிக்கற்களுக்கு அல்லது பொம்மைகளுக்கு நகைகள் என்ற பெயராலும், வாகனங்கள் என்ற பெயராலும், அலங்காரம் அபிஷேகம் என்ற பெயராலும் வாரி இறைத்து விரையமாக்குவதற்கு உபயோகப்படுகின்றன.

மூன்றாவதாக, தெருவில் நடமாடும்போது அல்லது வண்டிகளில் போகும்போது, ஒரு ஆண் ஒரு பெண்ணின்மேல் பட்டுவிட்டால் கற்பு கெட்டுவிட்டதாகக் கருதப்படும் பலர் கோவில்களுக்குள் சென்றால்மாத்திரம் ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் இடித்துக்கொண்டும், தள்ளிக்கொண்டும், வேண்டுமென்றே கெட்ட எண்ணமுடையவர்கள் "கடவுள்" பேரைச்சொல்லிக்கொண்டு அட்டூழியம் செய்வதற்கும், திருடுவதற்கும் இடமாயிருக்கின்றன.

இதுவும் போதாமல் கடவுளுக்கு அடியார்கள் என்ற பெயரால் "தாசிகள்" என்ற ஒரு கூட்டத்தை வைத்து. அங்கே ஆடச்சொல்வதும், பாடச்சொல்வதும், அவர்களை கடவுள் தரகர்களான அர்ச்சகர்கள் அனுபவிப்பதற்கு—அதாவது சுருக்கமாகக்கூறினால் 100க்கு 100 கோவில்கள் விபச்சார விடுதிகளாகவேஇருக்கின்றன.

ஆனால் இந்தத்தொழில், அதாவது 'தாசி'த்தொழில் கட்டாயம் இருக்க வேண்டுமென்றும், அவர்களை நிறுத்திவிட்டால் ஹிந்து மதம் அழிந்து விடுமென்றும் சொல்லும் பி. ஏ. பி. எல்., பட்டதாரிகள் கூட நம் நாட்டில் மலிந்து கிடக்கும் போது, இன்னும் 1000 மிஸ் மேயோக்கள் நம் மீது காறித்துப்பினாலும் நமக்கு புத்திவராத நிலைமையில் தான் நாம் இருந்து வருகிறோம்.

இவைகளையெல்லாம்பற்றி மிக விரிவாய்ச் சொல்ல வேண்டுமென்பது எனது விருப்பம். நேர்ந்தால் வேறொரு சமயத்தில் இதைப்பற்றிப் பேசலாம்.

இச்சந்தர்ப்பத்தில் ஒருவார்த்தை. நான் சொல்லுகிற விஷயங்களில் சில வார்த்தைகள் சிலருக்கு சற்று அதிககாரமானதாயிருக்கலாம். அதற்கு நான் என்ன செய்யமுடியும்? ஆயிரக்கணக்கான வருஷங்களாய் மூடநம்பிக்கைகளிலும் குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களிலும் ஈடுபட்ட ஒருஜனசமூகத்திற்கு கொஞ்சம் வேகமான மருந்து கொடுத்துத்தான் வியாதியைத் தீர்க்க வேண்டியிருக்கிறது.

இனி இவ்வளவு கெடுதிகளுக்கு இருப்பிடமாயிருக்கும் இந்துக்கோவில்களை எப்படி கல்விக் கழகங்களாக ஆக்குவது? முதலாவதாக, கோவிலின் உட்புறத்தில் சரியான ஜன்னல்கள், பெரிய வாசல்கள் முதலியன வைத்து அங்கு படிப்பே இல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக மேல் ஜாதிக்காரர்கள் என்பவரால் அழுத்தப்பட்டுக் கிடக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவசக்கல்வி சொல்லிக்கொடுக்க வேண்டும். அதற்குவேண்டிய பணத்திற்கு சர்க்காரிடத்தில் பல்லைக்காட்டிப் பணம் கேட்க வேண்டியதில்லை. வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவானேன்? எங்கும் பரந்திருப்பதாகச் சொல்லப்படும் கடவுளுக்கு அவசியமில்லாத தங்க வாகனங்களையும், ஆசையற்ற 'கடவுளுக்கு' அவசியமில்லாத நகைகளையும் விற்று ஆதிதிராவிடக் குழந்தைகளுக்கு துணி, புத்தகம், முதலியன வாங்கிக்கொடுக்கவேண்டும். செப்புப் பொம்மை தலையில் கொட்டும் குடம் குடமான பாலை, பாலே பார்த்திராத பாமரக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

வாணவேடிக்கைக்கு விரயமாகும் பணத்தைக்கொண்டு Health Exhibition சுகாதாரத்தைப் போதிக்கக்கூடிய கண்காட்சிகள் காண்பிக்க வேண்டும். அவைகளைப் பார்ப்பதற்கு சகலமதத்தினரையும் அனுமதிக்க வேண்டும்.

உற்சவங்களுக்குச் செலவழிக்கப்படும் லட்சக்கணக்கான திரவியத்தைக்கொண்டு பெரிய நூல் நிலையங்கள் (Libraries) வாசகசாலைகள் (Reading Rooms) வைக்கவேண்டும். உண்டியலில் வியாதிக்காகவும், பிறகாரியங்களுக்காகவும்வேண்டிக்கொண்டு ஜனங்கள் கொண்டு வந்து கொட்டும்பணத்தைக்கொண்டு, கோவிலுக்குள் க்ஷய ரோக ஆஸ்பத்திரி, மருத்துவ ஆஸ்பத்திரி முதலிய ஆஸ்பத்திரிகளை அமைக்கவேண்டும்.

கடைசியாக இந்து மதங்களையல்லாத பிறமதங்களின் கோவில்களைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை—அவைகளில் இந்துக்கோவில்களைப் போல் அவ்வளவு வீண் விரயம் இல்லை என்றாலும், அவைகளைக்கூட மக்களது அறிவுவளர்ச்சிக்குப் பயன்படுத்துவதால் எந்தக்கடவுளுக்கும் கோபம் வந்துவிடாது. மனிதன் அறிவு வளர்வதால் எந்தக்கடவுளாவது கோபித்துக்கொண்டு, தனக்கு Church வேண்டும், பள்ளிவாசல் வேண்டும், கோபுரம் வேண்டுமென்று நினைத்துக்கொள்வதாயிருந்தால் அந்தப் பேராசைக் கடவுள் நமக்குத் தேவையில்லை.

எனவே, இந்த குருகிய நேரத்தில் எனக்குத் தோன்றிய சிலவற்றை மட்டும் குறிப்பிட்டேன். தோழர்கள் இதைப்பற்றி இன்னும் விரிவாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறபடியால்இத்துடன் தங்கள் அனைவருக்கும் எனதுவணக்கத்தைத்தெரிவித்து, இதை முடிக்கிறேன்.

---

## மதுரை நாடார் மகா ஜன சங்கம்.

மேற்படி சங்கத்தின் கவுன்சில் கூட்டம் 11—10—32 ந்தேதி மாலை 5 மணிக்கு நடைபெறும் அதுசமயம் பலவிஷயங்களைப் பற்றி ஆலோசிக்கப்படும் என ஒருசிருபர்எழுதுகிறார்.

---

புகன்று, சாதி, மதசாஸ்திரங்களை அழித்துக்கரையேறவேண்டுமென்று புகன்ற கொள்கைகளைச் சிறிதும் கடைப்பிடித்து ஒழுகாது, அவர்கள் உருவத்திற்குமட்டும் விழாக்கொண்டாடினால் 'பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டு நாமமது தமிழர் எனக்கொண்டிங்குவாழ்தல் நன்றோ.

பகுத்தறிவையும், சுயஉணர்ச்சியையும் கொண்டு தமிழ்ப்பெரியார்கள்பால் அன்பும் பக்தியும் ததும்பி தமிழர் சமூகத்தையும் நாட்டின் நலத்தையும் கோரி முன்வரும் இளைஞர்களைப்பெரியோர்களான வைதீக 'அடியார்'களாகிய நீங்கள் ஐதீகம் பெரிதென்று முழக்கம் செய்து குறுக்கிட்டால் இதைவிட ஒரு பெருந்தீங்கு தமிழர் சமூகத்திற்கு வேறில்லை. நான் முன்னமே சொன்னபடி என் மனத்தில் எவ்வித உணர்ச்சி உண்மையாக உண்டாயிற்றோ அவ்வுணர்ச்சியைத்தான் இங்கு வெளியிட்டேன். பெரியார் காலத்து இருந்த ஒரு மதப்பைத்தியம் அப்பெரியாரின் வாழ்வுக்கு ஒருவாளாக இருந்து அவரது உயிரையும் மாய்த்தது என்ற ஒரு கொள்கையை உங்களுடைய ஆர்ப்பாட்டத்தினால் அடக்கிவிடவும் முடியாது. இம்மேடையின்மீது பிரசாரம் செய்வதால் என் சுயநலத்தைச் சிறிதும் கருதியவனல்லன். ஆகவே நீங்கள் எல்லோரும் இராமலிங்கப்பெரியாரின் உண்மை பக்தர்களாகக்கொண்ட திருக்கூட்டமாயிருக்கும் பட்சத்தில் அவர்புகன்ற பொய்யாத வாய்மைகளின்படி சாதி சமயமார்க்கங்களையெல்லாம் தகர்த்துச் ஜீவகாருண்ய சமரசசன்மார்க்க உணர்ச்சியை பகுத்தறிவையும் சுயமரியாதையையும் கொண்டு உணர்த்துங்கள்.

# தன்மதிப்பியக்கமும், தனிப்பெருங் கடவுளும்.

## தாருல் இஸ்லாத்தின் தவறான கூற்றுகள்.

[தோழர் அ. இராகவன்]

பகுத்தறிவே தன் பேராயுதமாய்க்கொண்டு உலகமெங்கும் சமத்வம், சகோதரத்வம், சுதந்தரம் முதலிய கொள்கைகளை அஸ்திபாரமாகக்கொண்டு, யாண்டும் முதலாளி-தொழிலாளி, ஏழை-பணக்காரன், உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி, ஆண்-பெண் முதலிய சகல வேற்றுமைகளையும் ஒழித்து விடுதலை! விடுதலை!! என்ற ஆரவாரத்துடன் மக்கள் சுகவாழ்வடைய உலகமெங்கும் ஒரு பெரும் மாறுதலையுண்டாக்கி வருவது நம் தன்மதிப்பியக்கமேயாகும். இவ்வியக்கம் பற்பல நாடுகளிலும், பற்பல விதமான பெயர்களால் மன்பதைகட்கு அரும் பெருந்தொண்டாற்றி எங்கும் சாந்தியும் சமாதானமும் பொங்கித்ததும்பும்படி செய்து வருகிறது, இவ்வியக்கம், மனிதர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பவைகள் பழைய கொள்கையாயிருப்பினும், புதிய கொள்கையாயிருப்பினும் அவற்றை ஒழித்து விட்டு, புதுமையாயினும் பழமையாயினும் மக்கட்கு நலந்தருவனவாயிருப்பின் அவைகளைக்கைக்கொள்ளும்படி முரசறைந்து வருகின்றது. இவ்வியக்கத்திற்கும் எந்த மதத்தினிடம், எந்தக்கடவுளிடமும் பகையில்லை. மக்கட்கு இன்னல் செய்துவரும் மதத்தையும் கடவுளுணர்ச்சியையும் ஒழித்துவிட இவ்வியக்கம் என்றும் தைரியமாய் முன்வரும். இவைகளைக்கொண்டு பல பழமை விரும்பிகளும், இவ்வியக்கத்தை மேற்போந்த வாறுணர்ந்தவர்களும் பகுத்தறிவிற்குப் பகையாயிருக்கும் மாக்களும் இஃதோர் நாஸ்திகஇயக்கமென்று நவில்கின்றனர். ஆனால் இவ்வியக்கத்தின் கொள்கைகள் ஒருபொழுதும் நாஸ்திகமாகா இதுவரை சுயமரியாதை இயக்கத்தின் எந்த மஹாநாடுகளிலும் கடவுளில்லை என்று தீர்மானிக்கவில்லை. ஆனால் பற்பல மகாநாடுகளிலும் கடவுளுக்கும் மனிதர்களுக்கு மிடையே தரகர்கள் வேண்டாம், கடவுளுக்கேன்று இனி ஒரு பைசாவும் செலவழிக்கக்கூடாது என்பன போன்ற தீர்மானங்கள்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே யொழிய கடவுளில்லையென்று எங்கும் தீர்மானிக்கவில்லை. ஆனால் சுயமரியாதை இயக்கத்தில் உறுப்பினராயிருக்க ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் இடமுண்டு. எவராயிருப்பினும் சுயமரியாதைச் சங்கத்தின் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவராயிருக்க வேண்டும் என்பது சுயமரியாதை இயக்கத்தலைவர்களின் அபிப்பிராயம். இந்நிலையில் சுயமரியாதை இயக்கத்தில் நாஸ்திகர்கள் சிலரும் இருக்கலாம். குடி அரசு, அவர்களின் பகுத்தறிவிற்குப் பொருந்திய வாதங்களையும் பிரசுரித்திருக்கலாம், இவைகளினலெல்லாம் சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம் என்று நவின்றுவிட முடியாது. சுயமரியாதை இயக்கத்திலுள்ள ஆஸ்திகர்களும்கூட கடவுளைப்பற்றியாயினும், பேய்களைப்பற்றியாயினும் வேறெவைகளைப்பற்றியாயினும் ஆராய்ந்து தம் அறிவிற்கண்ட விசயங்களைத்தான் நம்புவார்களே யொழிய எவைகளைப்பற்றியும் மூட நம்பிக்கைகொள்ளார். கொள்ளவும் கூடா. இதை ஆதரித்து பிரமஞான சபையின் தலைவியார் திரு அனிபெசண்டம்மையார்,

உனது மனச்சாக்ஷிக்கு சரியென்றுபடும் சிறுவிஷயங்களையும் செய்ய முன்றுவா. மற்றவனது மனசாக்ஷி எப்பேர்ப்பட்டது என்பதற்காகவாவது, அல்லது அவன்தன் மனசாக்ஷியின்படி நடக்கிருனு என்பதற்காகவாவது, நீஉத்திரவாதியல்ல. உனக்குக்கஷ்ட நிஷ்டூரங்கள் இருந்தபோதிலும் உன்னுடைய மனசாக்ஷியின்படி நடக்க நீஉத்தரவாதியாயிருக்கின்ருய் நஷ்டம் என்பது வெளித்தோற்றமேதவிர உண்மையிலல்ல, என்பதைக்கவனத்தில்வை; சரியென்று தெரிந்திருப்பதைச்செய்வதில் உனக்கு ஓர்நஷ்டமுமில்லை. ஆனால் விஷயமொன்றை உன்னுடைய மனோபாவனையிலாவது, பக்ஷபாதமாகவாவது பித்தமயக்கத்திலாவது சரியென்று மதித்துக்கொள்ளாமலிருக்க ஜாக்கிரதையோடிருக்கவேண்டும், என்றும் ஷைசபையின் மற்றொருவர் தலைவராயிருந்த திரு. லெட்பீட்டர்.

(எத்தகைய பெரியாருடையவார்த்தையாயினும்) அது தம்முடையசொந்தஅனுபவமாகப் போகிறதில்லை. நாம் ஒருவிஷயத்தை தெரிந்து கிரகித்துக்கொண்டு அதைநம்மறிவோடு அறிவாகச்சேர்த்து அதில் நாம்வளரவேண்டும். அதைநம்மில்வேருன்றவிடவேண்டும் நாம் கிளிப்பிள்ளைகளைப்போல் வாசித்ததைச்சொல்லிக்கொண்டிருக்கும் வரையில் விஷயங்களெல்லாம் மூடநம்பிக்கைகளே. இங்கே எழுதியிருக்கின்றது, அங்கேஎழுதியிருக்கின்றது. என்பதைவிட்டு நல்ல மூலாந்திரம் தெரிந்துகொள்ளாவிடில் உண்மைப்பொருளில் இருக்கும் நம்பிக்கைகூட நம்பிக்கைதான், நம்முடைய மனதோடு மனதாகும் போது அது எனது, என்னுடைய சொந்தம் நான் ஏன் நம்புகிறேனென்று எனக்குத்தெரியும், ஆதலால், எனது நம்பிக்கை அறிவோடுள்ள நம்பிக்கை, மூடநம்பிக்கையல்ல என்றுசொல்லலாம் என்று கூறியது எங்களுக்குப் பெரிதும் உடன் பாடேயாகும். தன்மதிப்பியக்கத்தார்கள் கடவுளைப்பற்றிக்கவலைப்படுகின்றவர்களல்ல. அல்லது சைவர்களைப்போல் கடவுள் பல காலம் உயிரோடு வாழப்பல்லாண்டு பாடுகிறவர்களல்ல. கடவுளை சிங்கம் போன்ற ஒருபயங்கர வஸ்துவென்றோ, கொடூரகுணமுள்ள ஓர் சக்தியென்றோ, பணம்,சோறு,பழம்,பாயசம் முதலியவற்றில் விருப்புள்ளவனென்றோ எண்ணுவதில்லை. கடவுளைக்கல்லென்றோ, புல்லென்றோ; கட்டையென்றோ, மட்டையென்றோ செம்பென்றோ, பித்தளையென்றோ யானையென்றோ, சிங்கமென்றோ பாம்பென்றோகுளமென்றோ, நதியென்றோ நினைத்து அடிபணிகின்றவர்களல்ல. கடவுள் கடவுளென்று முயற்சியை கைவிட்டு விடுகிறவர்களல்ல. எல்லாவற்றிற்கும் கடவுளையும் விதியையும் நம்பியிருப்பவர்களல்ல. தன் மதிப்பும் தன் நம்பிக்கையும் எக்காலத்தும் கைவிடுகிறவர்களல்ல. தன் மதிப்பியக்கத் தனிப்பெருந்தலைவர் ஈ. வெ. ராமசாமி கடவுள் உண்டோ இல்லையோ வென்ற ஐயப்பாட்டிலும் ஆராய்ச்சியிலும் மக்கள் ஈடுபட்டு காலத்தை வீணாய்க்கழித்துக் கொண்டிருக்க வேண்டாம். கடவுள் ஒன்றிருந்தாலும்சரி இல்லாவிட்டாலும்சரி மனிதன் மக்களுக்கு நன்மைதரும் தொண்டைச்செய்து கொண்டிருப்பதே சாலச்சிறப்புடையது என்றுகூறியுள்ளார். யாங்களும், தரித்திரமும் நோயும் பெரும்பாலும் பீடித்துள்ள இந்தியர்கள்முதலில் மனிதனின் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத ஒன்றைக்கண்டு பிடிக்க முயன்று கஷ்டமுற்று சாவதைவிட முதலாவதாக தரித்திரத்தையும் நோயையும் போக்கும்வழியை முதலாவதாகக் கண்டுபிடித்து சுகவாழ்வை அடைந்த பின்னரே கடவுளைக்காண வேண்டுமானால் முயற்சிப்போம் என்றேகூறுகின்றோம். கடவுளைப்பற்றி யாதொன்றும் அறியாது, வெறும் மூடநம்பிக்கைகொண்டு, கடவுளுக்காக மக்களை கருவறுக்கும் காதகர்களினும், கடவுள்பேரில் மிகுந்த பக்திகொண்டசாதுபோல் நடித்து கொலை, களவு, கள், காமம், சூது முதலிய தீயவிஷயங்களைப்புரிந்து வரும் ஆஸ்திகனினும், கடவுளின்பேரால் மதவேற்றுமைகளையும், ஜாதிப்பிரிவையும், ஏனைய உயர்வு தாழ்வுகளையும் உலகில் நிலைநாட்டி மதப்போர், ஜாதிப்போர், தொழிலாளி முதலாளிப் போர்களையும் வளர்த்து வரும் வன்கண்ணர்களினும், கடவுள்பக்தன் என்று பிறர் எண்ணும்படி தாடி தலைப்பாகை, உருத்திராக்கம், விபூதி, துளசிமணி முதலியவைகள் அணிந்து மக்களை எமாற்றி வயிறு வளர்ப்பவனிலும், மோட்சம், நரகம் முதலிய வற்றினைப்பற்றி மக்களுக்குப்பயங்காட்டி, முரீது, ஞான தீட்சை, பாவசங்கீர்த்தனம் என்னும் பெயர்களால் பணத்தையும், கன்னியர்களின் கற்பையும் கவரும் கசடர்களினும், இன்னோரன்ன பிற செயல்களைப் பூண்டுவரும் மக்களினினும் கடவுள் இருப்பினும் இருக்கட்டும் இல்லாதொழியினும் ஒழியட்டும் எனக்குக்கவலை யில்லை. மன்பதைகள் சுகவாழ்வடைய என்னலானதையெல்லாம் செய்வதே எனது கடமை. அதற்காக எனது வாழ்நாளை தியாகஞ்செய்யவும் அஞ்சேன், என்னோடு சநந்துவேற்றுமை கொண்டதற்காக எவரையும் தூஷியேன், கொலைபுரிய நாடேன் எனக்கூறி தன் மனதாலும் கொலை களவு, கள், காமம் சூது முதலிய தீயசெயல்களை நாடாத ஒருவனைநாங்கள் ஒருபொழுதும் நாஸ்திகனென்று நவிலோம். அவனே முற்கூறிய செயல்களையுடைய ஆஸ்திகனிலும் சிறந்த உத்தமனென்றும், நித்தமும் போற்றுவோம். கடவுள் நம்பிக்கையுடையோனாய் பலப்பலதீய செயல்களைப்புரிந்து வந்த ரஷியதேசத்து கபடசந்நியாசியாகிய ரஸ்புட்டினை ஆஸ்திகனென்று உலகம் மதித்துக்கொள்வதும், இல்லற ஞானியாய், சமதர்மவாதியாய் தம்கனவிலும் நனவிலும் ஏழைகளின்தோழனாய், மனிதப்பிராணிகளின் நல்வாழ்வில் இரவும்பகலும் கவனம் செலுத்திவரும் ரஷிய தேசசர்வாதிகாரி ஸ்டாலின் என்பவரை நாஸ்திகர் என்று கூறும் உலகினரைக்கண்டு நாங்கள் ஆச்சரியப்படுகின்றோம்.

எவரிடத்திலிருந்து மன்பதைக்கெல்லாம் அதிக நன்மையுண்டாகிறதோ அவர் தாம் மனிதர்களுக்குள் மகா சிலாக்கிய மானவர் என்றும்,

"ஆண்டவனுடைய படைப்புகளெல்லாம் அவனுடைய குடும்பத்தில் சேர்ந்தவையாயிருக்கின்றன; ஆதலின் ஆண்டவனுடைய படைப்புகளுக்கு அதிகமான நன்மையைச் செய்வதற்கு எவரொருவர் பிரயத்தனப்படுகிருரோ, அவரே ஆண்டவனுக்கு அதிக உவப்புள்ளவராயிருக்கின்ருர்"

என்ற முகம்மது நபி அவர்களின் திருவாக்கியத்தை என் தன்மதிப்பியக்கத்தார் பாலும் உபயோகப்படுத்தக்கூடாது? ஒருவனை ஆஸ்திகன் நாஸ்திகன் என்று முடிவுகட்ட அவனுடைய பேச்சைக்கொண்டும் வேடத்தைக்கொண்டும் முடிவுகட்டல்தவறு, அவ்வாறு முடிவுகட்டவும்முடியாது, ஆனால் அவனுடைய செயலையே நாம் ஆராய்தல் வேண்டும். சுயமரியாதை

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

# 55-வயதில் குழந்தை பெறுதல்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

நியூஸ்—ஆப்—தி--வோர்ல்ட் [News of the world] என்னும் பத்திரிகையின் சொந்தக்காரர்கள், அதிக வயது சென்றபின்னர் பிள்ளைபெறும் ஸ்திரீகளுக்கு 25 பவுன் இனாம் அளிப்பதாக விளம்பரம் செய்திருந்தார்கள். இந்த வெகுமதியைப் பெறுவதற்காக, கீழ்க்கண்ட அதிக வயது சென்ற தாய்மார்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அவர்களின் விபரம் வருமாறு:—.

மிஸஸ் மேரி ஹிக்கின்ஸ். (நெ 13 லாவிட்ஸ்லேன். பிளார்னிதெரு, கார்க் வீடி, ஐரிஷ்பிரீஸ்டேட்) இந்த அம்மையாருக்கு 56-வயது ஆகிறது. இவர் தமது 55-வது வயதில், அதாவது 1931-ளு மார்ச்சு மீ 17உ இரவு ஒரு குழந்தையைப் பெற்றார். அக்குழந்தைக்கு பாட்ரிஷியா காத்லீன் ஹிக்கின்ஸ் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

ஸௌதாம்டன் நகரத்திலிருக்கும் மிஸஸ் எலிஸெபத் பியர்ஸ் என்னும் அம்மாள் தமது 54-வது வயதில் தமது கடைசி பிள்ளையைப் பெற்றதாகக் கூறுகிறார்.

டெர்பிக்கு அடுத்த ஆலன்டன் என்னும் இடத்தில் வசிக்கும் மிஸஸ் ஸிம்ஸ் என்னும் பெயருள்ள அம்மையார், தமது 54-வது வயதில் கென்னத் ஸிம்ஸ் என்னும் பெயருள்ள குழந்தையை ஈன்றதாகத் தெரிவித்திருக்கிறார்.

மிஸ்டர் ஏ. ஈ. கூச் என்பவர், தமது 53 வயதுள்ள மாமியார் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதாகத் தெரிவிக்கிறார்.

இவ்விதம் 53, 54, 55 வயதில் கூட பிள்ளை பெறுகிற ஸ்திரீகள் மேல் நாடுகளில் இருக்கிறார்கள். நமது நாட்டிலோ என்றால், 5 வயதில் கலியாணம் செய்து 10 வயதில் பிள்ளை பெற்று 20 வயதில் கிழவியாகிற பெண்களுக்குக் குறைவுகிடையாது. இந்த லக்ஷணத்தில், குறுகிய நோக்கமுள்ள சில வைதீகர்கள் சாரதா சட்டத்தைஎதிர்ப்பதும், பாலிய விவாகத்தை ஆதரிப்பதுமாயிருக்கிறார்கள்! மேல் நாடு மேல்நோக்கிச் செல்லுகிறது; கீழ்நாடு கீழ்நோக்கிப் போகிறது. இந்துமதமும், புரோகிதர் ஆதிக்கமும், வைதீகர்களின் மூடத்தனமும் உள்ள வரையில் நமது நாட்டிற்குக் கதி மோட்சமில்லை. நல்ல காலமாக இராமசாமியாரின் சுயமரியாதை இயக்கம் தோன்றி பகுத்தறிவைப் பரப்பி நாட்டிலுள்ள மூடத்தனத்தை ஒழித்து வருகிறது. சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்களின் உழைப்பினாலும், குடி அரசு பத்திரிகையின் போதனைகளினாலும் குறுகிய நோக்கங்களும், மூடத்தனங்களும், அஞ்ஞான புத்தியும், வைதீகக் கொடுமைகளும் நாளுக்குநாள் குறைந்து வருகின்றன. ஆறு, ஏழு வருஷங்களுக்குள்ளாக, சுயமரியாதை இயக்கத்தினால் நமது நாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நோக்கும் போது, இன்னும் கால் நூற்றாண்டுக்குள்ளாக நமதுநாடு ஜப்பான், துருக்கி தேசங்களுக்குச் சமமாக முன்னேற்றமடைந்துவிடும் என்று தைரியமாக நினைக்க இடமுண்டு. நமது நாட்டைக் கெடுப்பதெல்லாம், மூடபழக்க வழக்கங்களும், மூடநம்பிக்கைகளும், இவைகளுக்கு ஆதாரமாயிருக்கும் மதங்களும் சாஸ்திரங்களுமே. பகுத்தறிவைப் பரவச் செய்தால், மதங்களும், சாஸ்திரங்களும் மூடத்தனங்களும், முட்டாள் நம்பிக்கையும் தாமாகவே ஒழிந்துவிடும்.

நமது நாட்டில் பொதுவாகப் பெண்களுக்குச் சிறுவயதிலேயே கலியாணம் செய்து விடுகிறபடியால் அப்பெண்கள் சிறுவயதிலேயே குழந்தைகளைப் பெறுகிறார்கள். ஆகவே சீக்கிரமாக அப்பெண்களுக்குக் கிழத்தனம் வந்துவிடுகிறது. அதன் பலனாக ஆயுசும் குறைகிறது. பெண்கள் முதிர்ச்சியடைந்த பிறகு அதாவது தேகவளர்ச்சி முற்றுப்பெற்ற பிறகு கலியாணம் செய்தால் அப்பெண்கள் நல்ல பலமுள்ள குழந்தைகளைப்பெறுவார்கள். அன்றியும் அவர்களுக்குச் சீக்கிரத்தில் பலமும் குறையாது. மனிததேகம் 20 அல்லது 22 வயது வரையில் வளர்ச்சியடைகிறது. அந்த வயதுக்குமேல் தேகவளர்ச்சி நின்று விடும். தேக வளர்ச்சி முடிந்த பிறகு கலியாணம் செய்வதுதான் உத்தமம். நமது தேசம் உஷ்ணபிரதேசமாகையால் பெண்கள் 12 முதல் 15 வயதுக்குள் பக்குவம் அடைகிறார்கள். அதாவது பிரவிடையடைகிறார்கள். ஆனால், இந்தக் காரணத்தைக் கொண்டு அப்பெண்களின் தேகஉறுப்புகள் முழுவளர்ச்சியடைந்து விட்டதாகக் கருதக்கூடாது. பெண்கள் பிரவிடையான பிறகும், 20வயது வரையில் அவர்கள் தேகம் வளர்ச்சியடைகிறது. இதை உணராமல் பெண்கள் 12வயதிலேயே புஷ்பவதிகளாய் விட்ட காரணத்தைக்கொண்டு உடனே கலியாணம் செய்துவிடுவது முட்டாள் தனமாகும்.

உலக சிருஷ்டியைப் பார்க்கும் போது சீக்கிரமாக வளர்ச்சியடைகிற பிராணிகள் சீக்கிரமாகவே இறந்து விடுகின்றன. நாள் சென்று முதிர்ச்சியடைகிற பிராணிகள் நெடுநாள் உயிர் வாழ்கின்றன. உதாரணமாக ஆடு நாய் போன்ற பிராணிகள் சீக்கிரத்தில் குட்டிகளை ஈன்று சீக்கிரமாக இறந்துவிடுகின்றன. நெடுநாள் வளர்கிற யானை, குதிரை முதலிய பிராணிகள் நெடுநாளைக்குப்பிறகு குட்டிகளை ஈன்று நெடுநாள் உயிரோடு இருக்கின்றன.

மனிதர்களிலும், சிறுவயதிலேயே கலியாணம் செய்தால் இளமையிலேயே பிள்ளைகளைப் பெற்று சீக்கிரமாகவே வாலிபத்தனத்தை இழந்துவிடுகிறார்கள். உடனே கிழத்தனமும் பலவீனமும் நோய்களும் கடைசியாய் சீக்கிரமாகவே சாக்காடும் மேலிடுகிறது. நமது நாட்டில் சிறுவயதிலேயே பெண்களுக்குக் கலியாணம் செய்துவிடுகிறபடியால்தான் 50 வயதுக்கு மேல் பிள்ளை பெறுகிற ஸ்திரீகள் நமது நாட்டில் கிடையாது.

---

# ஆலயப்பிரவேசம் அடுக்குமா?

## பிராமண சமூகத்தைக்கடல் கொண்டது!

### யாகத்தின் பேரால் பலி!

### தஞ்சை பார்ப்பனர் ஆர்ப்பாட்டம்.

கடந்த 1—10—32ந்தேதி தஞ்சை சனாதன தர்ம சபையின் ஆதரவில்வைதீகப்பார்ப்பனரின் கூட்டம் ஒன்று, கும்பகோணம் எம். கே. வைதினாதய்யர் என்ற பார்ப்பனர் தலைமையில் கூடிற்று. பல வைதீகப் பார்ப்பனர் விஜயம் செய்திருந்தனர். திரு. காந்தி உண்ணாவிரதமிருந்ததும், அதன்காரணமாய்ஏற்பட்ட புனா ஒப்பந்தமும், பல இடங்களில் கோவில் பிரவேசங்களும், திரு. கேளப்பன் சத்தியாக்கிரகம் முதலியவற்றைப்பற்றிக் கண்டிக்கவும், க்ஷீணதிசையடைந்துவரும் பார்ப்பன சமூகத்தை சீர்திருத்துவதுமே நோக்கமாகக்கொண்டு இக்கூட்டம் கூட்டப்பட்டதாம்.

தலைவர், தங்கள் சமூகம், மேல்நாட்டு நாகரீக அநுஷ்டானத்தாலும், சரியான கல்வி முறையில்லாததாலும் வரவர க்ஷீணதிசையடைந்து வருவதாகவும், சத்தியாக்கிரகம் முதலிய ராஜீய வியவகாரங்களாயிருந்து இப்போது மதத்திலும் தலையிட ஆரம்பித்து, கோயில் பிரவேசம் முதலியவைகளில் தலையிட்டது கண்டிக்கத்தக்கதென்றும், திரு. கேளப்பனின் "விரதம்" வன்மையாய்க் கண்டிக்கத்தக்கதென்றும், எத்தகைய நிர்ப்பந்தத்திற்கும் பயப்படாது எதிர்த்து வரும் கள்ளிக்கோட்டை ஜாமொரினைப் பாராட்டுவதாகவும் பேசினார்.

திரு. கோதண்டராமய்யங்கார் என்பவர் பேசுகையில் திரு. காந்தியின் வேண்டுகோளை மீறி திரு. கேளப்பன் விரதமிருப்பதாயும், இத்தகைய உண்ணாவிரதத்தை கிரிமினல் குற்றமாகக் கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

பின்னர் காந்தி உள்பட தலைவர்களுக்கு சாஸ்திர அறிவு போதாதென்றும், அதனாலேயே தீண்டாதாரை கோவிலுக்குள் அநுமதிக்கும்படி வற்புறுத்துகின்றனர் என்றும் பலரால் விவாதிக்கப்பட்டது.

தீண்டப்படாதார் ஆலயப்பிரவேசம் செய்யும் விஷயமாய் சட்ட பூர்வமாய் நிர்ப்பந்தம் செய்வதை கண்டிப்பதாகவும், இது சம்பந்தமாய் சட்டசபைகளில் தீர்மானங்கள் வந்தால் அவைகளை கவர்னரோ, அல்லது வைஸ்ராயோ அநுமதிக்கலாகாதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் ஓர் யாகம் செய்ததாகவும், அதுசமயம் ஓர் வெள்ளாடு கொலை செய்யப்பட்டு அதன் மாமிசம் பக்குவப்படுத்தப்பட்டு பலருக்கு வினியோகமும் செய்யப்பட்டதாம்.

---

# கோவில் என்பது குச்சுக்காரர் விடுதி.

# திருச்சியில் பொப்பிலி மகாராஜா.

## குதூகல வைபவம்.

### சுயமரியாதை இயக்கத்திற்கு பாராட்டும், ஆதரவும்.

கனம் பொப்பிலி மகாராஜா அவர்கள் பார்ப்பனரல்லாத வாலிபசங்கம், தெ. இ. நலஉரிமைச்சங்கம் சுயமரியாதைச்சங்கம் முதலிய பலசங்கங்களின் அழைப்பிற்கிணங்க சென்ற 2-10-32 தேதி திருச்சிக்கு விஜயம் செய்தார். ரயில் நிலயத்திலிருந்து பல பிரமுகர்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டார்.

பின்னர் சுயமரியாதைச்சங்கம், புரோகித மறுப்புச்சங்கம், பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம், தெ. இ. நலஉரிமைச்சங்கம்; பொட்டறுப்புப் சங்கம் முதலிய பல சங்கத்தாராலும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றிற்கும் மகாராஜா அவர்கள் பதிலளித்தார். அதுசமயம் சுயமரியாதைச் சங்கத்தின் வரவேற்புக்கு பதிலளிக்கும் போது குறிப்பிட்டதாவது:—

"இச்சங்கத்தினிடம் நான் சம்பந்தப்பட்டது இதுவே முதல்தடவையாகும். ஆனால் ஒன்றுமாத்திரம் உண்மையாகக் கூறுவேன். அடிக்கடி இவ்வியக்கத்தின் அரிய வேலைகளை நான் வெகு உற்சாகத்துடன், கவனித்துக்கொண்டு வந்ததுடன், இவ்வியக்கத்தின் கொள்கைகளையும் நான் வாசித்திருக்கின்றேன். தான் சுயமரியாதையைப் பெறுவது நாட்டிற்கே சுயமரியாதையை யுண்டாக்குவதாகும். இதை யுண்டாக்கவே இவ்வியக்கம் வேலைசெய்து வருகின்றது. இவ்வியக்கத்தின் உண்மையான கொள்கையை நன்கு ஆராய்ந்துப்பார்க்கில் இச்சங்கத்தின் கொள்கைகளை குறைகூற முடியாது. மகா கவியானவர், சுய அறிவு சுய அதிகாரம், சுய ஆராய்ச்சியுமே சிறந்த அதிகாரத்தை யளிக்குமெனக் கூறியுள்ளார். நாம் உயர்ந்த அரசியல் சீர்திருத்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வரிய கொள்கைகளை கடைப்பிடித்தாலல்லாது வெற்றியை யடையமுடியாது. தனக்கு தானே மரியாதை கொடுத்துக் கொள்ளாத, மனிதவர்க்கத்தின் சுதந்திரத்தைப் பெறாத ஒரு மனிதன் தனக்காவது, தன்னுடைய நாட்டிற்காவது தன்னுடைய சமூகத்திற்காவது எதையும் நிறைவேற்றி விடமுடியாது. இச்சங்கத்தின் வேலைகள் சமூகத்தையே பொருத்திருக்கின்றது. இதுவரையிலும் இந்நாட்டில் வேலைசெய்து வரும் சமூக இயக்கங்களும் ராஜீய இயக்கங்களும் இதைப்பற்றி கவனிக்கவேயில்லை. நெடுநாட்களாக நமது சமூகத்திலிருந்து வரும் ஊழல்களால் உண்டாகும் இழிவை பொருத்துக்கொண்டு சோம்பேரித்தனமாக இச்சங்க அங்கத்தினர்களிருக்க மாட்டார்களென்றுநான் தெரிந்துகொண்டேன். ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு காலத்தில் சீர்திருத்த இயக்கம் ஏற்பட்டு எல்லாஜனங்களும் ஒப்புக்கொள்ளும்படியான சீர்திருத்தத்தை செய்துக்கொண்டுவருகிறது.

பீஹார் ஒரிஸ்ஸா ராஜீய ஸ்தாபனத்தின் பொழுது தர்பங்கா மகாராஜா பிரசங்கத்தில், ஜாதி வித்தியாசமே ஒழிந்துவிடவேண்டுமென்று கூறியுள்ளார். நாடு முன்னேற்ற மடைவதற்கு ஜாதி வித்தியாசங்கள் ஒழிவது அவசியமாகும். இந்தியாவின் எல்லாபாகங்களிலும் உண்மை உணர்ச்சி ஏற்பட்டுவருகின்றது, ராஜீபசம்பந்தமான இயக்கங்களும் ஜாதி வித்தியாசம் ஒழிந்தால்தான் ராஜீய இயக்கம் பலப்படுமெனக் கண்டுகொண்டிருக்கின்றன. இதர மதத்தினர்கள் தங்களுடைய பலத்தை அதிகப்படுத்திக் கொள்ளுவதை முன்விட்டு இந்துமதத்தினின்றும் ஜனங்களை சேர்த்துக்கொண்டிருக்க இந்துமதம் கொடிய மதாசார விதிகளை பிரயோகித்து ஏராளமான ஜனங்களை பரிகொடுத்தது துக்கரமான விஷயமல்லவா? தாழ்த்தப்பட்டோருடைய பிரச்சினையே இன்றையதினமுக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது. பொதுக்கிணறுகளிலும் கோயில்களிலும் தாழ்த்தப்பட்டோர் அனுமதிப்பதைப்பற்றி விவாதம் நடைபெற்று வருகின்றது. தாழ்த்தப்பட்டோரை ராஜீய விஷயங்களில் சம்மந்தப்படும்படி செய்யவேண்டுமென்று பிரியப்படுபவர்களே, அவர்களை கோயில்களில் பிரவேசிக்க வொட்டாமல் தங்களுடைய அதிகாரத்தை உபயோகப்படுத்துவதை நினைத்தால் ஆச்சர்யமாகத் தோன்றவில்லையா? நெடு நாட்களாக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் இந்துமதத்தின் ஒருசார்பார் கோயில்களில் அனுமதிக்கப்படவேண்டுமென்பதே இவ்வியக்கத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று என்பதை நான் தெரிந்து கொண்டிருக்கின்றேன். இந்து மதத்தின் கொள்கைகளை நன்றாகத்தெரிந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனும் இவ் விஷயத்தில் அனுதாபம் காட்டவேண்டும். இவ்வியக்கம், இந்து மதத்தைப் புனிதமாக்கி உன்னத நிலைக்குக்கொண்டுசென்று, மிகவும் பழமையான இவ்விந்துமதத்தின் சில தப்பிதங்களை குறிப்பிட்டுக் காட்டி இதரநாட்டார் குறைகூறாமலிருக்கும்படி செய்வதே முக்கிய நோக்கமாக உடைத்தாயிருக்கிறது.

இவ்வியக்கத்தின் ஊழியம் தென்னிந்தியாவிலேயே செய்யப்பட்டுவருகிறது. வட இந்தியாவில் சீர்திருத்த உணர்ச்சி அதிகமாயிருப்பதால் இவ்வியக்கத்தின் செல்வாக்கு அங்குமாகினால் தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைவிட அதிகமாக வடஇந்தியா முன்னேற்றமடையும்.

இச்சீர்திருத்த இயக்கம் இந்தியாமுழுமையும் பரவி, இந்துமதத்தின் ஊழல்களை வேரறுத்து, ஜனங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டு பலமடையும் நாட்களை எதிர்பார்க்கின்றேன்.

சிறந்த ஊழியத்தை செய்து வரும் இவ்வரிய இயக்கத்திற்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக்கொள்வதுடன் பெரிதும் பாராட்டுகின்றேன். தவிர, இவ்வியக்கம் மேலும் மேலும் பலமடைந்து இந்துஸ்தான் வரையில் பரவவேண்டுமென எதிர்பார்ப்பதுடன் இவ்வியக்கத்திற்கு என்னுடைய பாராட்டும் ஆதரவும் நீடித்திருக்குமென நான் உறுதி கூறுகிறேன்.

---

# உலக அழகி துருக்கிமாது.

## வரவேற்பு வைபவம்.

திருமதி. கெரிமன் என்னும் துருக்கிப்பெண், சமீபத்தில் நடந்த சர்வதேச அழகு போட்டியில் மிகுந்த அழகி என்ற கீர்த்தியை பெற்றாள். இம்மாதம் முதல்தேதியன்று 'அழகிகளின் ராணி' பாரிசிலிருந்து இஸ்தான் பூலுக்கு திரும்பி வந்தாள்.

இப்பெண்ணை துருக்கி ஜனங்கள் மகோன்னதமான மரியாதைகளுடன் வரவேற்றனர். பெரிய மந்திரிகளுக்கும், தூதர்களுக்குங்கூட இவ்வளவு ஆடம்பரமான வரவேற்பு நடந்தது கிடையாது.

ரயில்வே ஸ்டேஷனில் சுமார் 3000 விலை உயர்ந்த பூமாலைகள் இவளுக்காக காத்துக்கொண்டிருந்தன.

சர்க்காரில் உயர்ந்த பதவிகள் வகித்துவரும் மந்திரிகளும் உயர்ந்த ராணுவ அதிகாரிகளும், பிரபலஸ்தர்கள் பலரும் இப்பெண்ணை வரவேற்பதற்காக ஸ்டேஷனுக்கு வந்து காத்துக்கொண்டிருந்தனர்.

வீதிவழியாக மோட்டாரில் போகும்போது ஜனங்கள் செய்த சந்தோஷ ஆரவாரங்கள் வானைப்பிளந்தன. கடைகளையும், தொழிற்சாலைகளையும் மூடிவிட்டனர். போகும் வழியெல்லாம், துருக்கியின் அழகை சர்வதேச போட்டியில் நிலை நாட்டிய அப்பெண் மீது, மலர்களைத் தூவி மரியாதைசெய்தனர். திருமதி. கெரியனின் மோட்டார் முழுவதும் புஷ்பங்களால் நிறைந்துவிட்டது.

இஸ்தான்பூலில் உள்ள போலீஸ் படை, கூட்டத்தை நிர்வகித்து ஒழுங்கு செய்வதற்கு போதவில்லை.

முக்கியமான பல துருக்கி நகரங்களில் இப்பெண்ணை வந்துவிட்டுப் போகுமாறு அழைத்திருக்கின்றனர். துருக்கியில் ஒவ்வொரு வீட்டிலும் இப்பெண்ணின் அழகைப்பற்றியே பேச்சாயிருந்து வருகிறது.

"எனது வெற்றி துருக்கி பெண்களின் வெற்றியாகும். துருக்கி பெண்களை விடுவித்த கெமாலுக்கே இப்பெருமை உரியதாகும்' என இப்பெண் கூறுகின்றாள்.

ஓர் ஐரோப்பிய கோடீஸ்வரரை இவள் மணந்துகொள்ளப்போவதாக ஓர்வதந்தியிருந்துவருகிறது. இதைப்பற்றி கேட்டபோது திருமதி. கெரிமன் கோபத்துடன் "அது பொய்" என்று கூறினாள்.

"நான் கலியாணம் செய்துகொண்டால், எனது கணவர், ஒரு துருக்கியராகவேயிருப்பார் என்பது நிச்சயம்' என்று இப்பெண் உறுதியாகக் கூறுகிறாள்.

---

குடி அரசு.

ஈரோடு 1932 அக்டோபர் மீ 9-உ

## மண்ணுருண்டை மாளவியாக்கள்.

—:0:—

திரு. காந்தியார் அவர்கள் தீண்டாதாருக்கு ஏற்பட்டிருந்த தனித்தொகுதியை ஒழிக்கும் பொருட்டுச் சில தினங்களுக்கு முன் உண்ணாவிரதமிருக்கத்தொடங்கியதும், அதன் பின் தலைவர்கள் என்பவர்கள் பம்பாயில் சமரச மகாநாடு கூடியதும், அதில் தீண்டாதாரின் தனித்தொகுதி முறை பலி கொடுக்கப்பட்டதும் பழய சங்கதிகளாகி விட்டனவென்று கூற முடியாது. இவ்வாறு தலைவர்களின் மகாநாட்டைக் கூட்டி ஒரு சமரச முடிவையுண்டாக்கப் பாடுபட்டவர்களில், திரு. பண்டித மாளவியாவே முதன்மையானவர் என்று எங்கும் புகழப்பட்டு வருகிறது. தனித்தொகுதியை ஒழிக்க விரதமிருந்த திரு. காந்தியாரோ "தனித்தொகுதியை ஒழிப்பது மட்டும் போதாது. தாழ்த்தப்பட்டார்க்கு, ஜாதி இந்துக்களுக்கு இருந்துவரும் சகல உரிமைகளும் கொடுக்கப்படவேண்டும்" என்று கூறினர். ஆகையால் தீண்டாதார் தலைவர்கள் தனித்தொகுதியை விட்டுக்கொடுத்துப் பொதுத்தொகுதித் தேர்தல் முறையை ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்காக, நாடெங்குமுள்ள காங்கிரஸ் வாதிகளும், சீர்திருத்தவாதிகளும் தீண்டாமையை விலக்குவதற்கு முயற்சி செய்வதாகப் பாவனைகள் செய்தனர். வடநாட்டில்பல கோயில்களைத்திறந்துவிட்டுவிட்டதாகவும், சில இடங்களில், தீண்டாத வகுப்பினருடன், உயர்ந்த வகுப்பு இந்துக்கள் சமபந்தி போஜனம் செய்ததாகவும், தண்ணீர் அருந்தியதாகவும், திண்பண்டம் தின்றதாகவும் செய்திகள் வெளிவந்தன.

தீண்டாதார்க்குப் பூணூல்போட்டு தீக்ஷை செய்வித்து அவர்கள் மீது ஒட்டிக்கொண்டிருக்கும் "சண்டாளத்துவ"த்தைப் போக்க முயற்சித்த திரு. மாளவியா புரோகிதர், ஒருநிபந்தனையுமில்லாமல் தன்னுடைய வீட்டிற்குத் தீண்டாதாரை அழைத்துச்சென்றதாகவும், தனது வீட்டிலுள்ள சொந்தக் கோயிலைத் தீண்டாதார்க்காகத் திறந்து விட்டதாகவும் பத்திரிகைகளில் வெளிவந்தன. வேதங்களையும், ஆகமங்களையும், ஸ்மிருதிகளையும், புராணங்களையும் உருப்போட்டு உருப்போட்டு மூளையில் சரக்கேயில்லாமல் இருக்கும் மரக்கட்டை வைதிகர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும், திரு. பண்டித மாளவியாவே, பூணூல், போடுதல், தீக்ஷை செய்வித்தல், கங்கையில்குளிப்பாட்டுதல் ஆகிய ஒரு சடங்குமில்லாமலேயே தீண்டாமையை ஒழித்து விட்டார் என்னும் செய்தியைக் கேட்டவுடன், பத்திரிகைகளெல்லாம் அவரை அளவு கடந்து புகழத்தொடங்கின; வைதிகப்பார்ப்பனர்கள் ஒன்றும் சொல்லுவதற்கு வழியில்லாமல் திகைப்படைந்திருந்தனர்.

ஆனால் நாம் மாத்திரம், இவைகளெல்லாம், தீண்டாதார்களை ஏமாற்றித் தனித்தொகுதித்தேர்தல் முறையை ஒழிப்பதற்காகச் செய்யப்படும் கண்கட்டி வித்தைகள் என்றே கூறிவந்தோம்.

இந்து மதத்தை அப்படியே வைத்துக்கொண்டு, இந்துமத சாஸ்திரங்களை அப்படியே வைத்துக்கொண்டு தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்று கூறுவது சுத்த அயோக்கியத்தனம் என்று சொல்லிக்கொண்டே வந்தோம். இத்தகைய நமது அபிப்பிராயம் சிறிதும் குற்றமுள்ளதல்ல என்பதைக் காட்ட திரு. மாளவியாவைப்பற்றித் தற்போது வெளிவந்திருக்கும் செய்தி ஒன்றே போதுமானதாகும்.

"வைதிகமாளவியா தீண்டாமையை ஒழிப்பதற்கு முனைந்து விட்டார் என்று புகழப்பட்ட வருணாச்சிரமதரும மாளவியா, களிமண்ணும் கங்காஜலமும் எடுத்துக்கொண்டு இங்கிலாந்துக்குப் கப்பலேறிச்சென்ற மாளவியா, பம்பாயைச்சேர்ந்த கல்பதேவி என்னுமிடத்தில் சென்ற 2-10-32ல் ஒரு கூட்டத்தில் பேசும்போது 'பழய கருப்பனே கருப்பன்' என்னும் சங்கதிக்கு வந்துவிட்டார். அவர்,

> "சமபந்தி போஜனம், கலப்புமணம் இவைகளைப்பொறுத்தவரையில் ஜாதிக்கட்டுப்பாடுகளை ஒழிக்கும் விஷயத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. தனிப்பட்டவகையிலோ, குடும்பசம்பந்தத்திலோ இம்முறைகளை அனுசரிக்க முயற்சிப்பது முடியாத காரியம்"

என்று பேசியுள்ளார். இதிலிருந்து திரு. மாளவியா புரோகிதரின் மனப்பான்மை என்ன என்பதைத்தெரிந்து கொள்ளலாம்.

ஜாதிக்கட்டுப்பாடு அதாவது வருணாச்சிரம தர்மம் இருக்கும் வரையிலும் தீண்டாமை ஒழியும் என்று பகுத்தறிவும் மூளையுமுடைய எவராவது ஒப்புக்கொள்ள முடியுமா? இன்று நமது நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் துவேஷிப்பதற்கும், ஒரு வகுப்பினர்க்கு மற்றொரு வகுப்பினர் கொடுமை செய்வதற்கும் காரணமாயிருப்பது பாழும் ஜாதிக்கட்டுப்பாடு, அதாவது வருணாச்சிரம தருமம் என்பதை கடுகளவு புத்தியுள்ளவர்கள், கூட மறுக்க முன்வரமாட்டார்களே. உயர்ஜாதி இந்துக்கள் தாம் வசிக்கும் தெருவில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடந்தால் தீட்டுப்பட்டுவிடும் என்று நினைப்பது ஜாதி அகங்காரமல்லவா? அவர்கள் தம்முடன் சமத்துவமாக உட்காரக்கூடாதென்று நினைப்பதும், பள்ளிக்கூடங்கள், காப்பிகிளப்புகள் முதலியவைகளில் தம்முடன் சமமாக உட்கார்ந்து படிக்கவோ சாப்பிடவோ இடந்தாராமலிருப்பதற்கும் காரணம் அர்த்தமற்ற ஜாதிக்கட்டுப்பாடு அல்லவா? ஆகையால் ஜாதி கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டால் ஜாதி உயர்வு தாழ்வை அப்படியேவைத்துக்கொண்டால் வருணாச்சிரமதருமம் என்னும் அர்த்தமற்ற கொள்கையை ஒப்புக்கொண்டால், எப்படித்தீண்டாமை அடியோடு போகமுடியும் என்று யோசனை செய்து பார்க்கும்படி கூறுகின்றோம்.

உண்மையிலேயே தீண்டாமை ஒழியவேண்டுமானால் முதலில் சாதிவித்தியாசம் ஒழிந்தாக வேண்டும். சாதிவித்தியாசம் ஒழியவேண்டுமானால் சாதிக்கட்டுப்பாடும், வருணாச்சிரமதருமங்களும் குழிவெட்டிப் புதைக்கப்பட்டாக வேண்டும்; இவைகளை நிறைவேற்றச்சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் எங்கும் நடைபெற வேண்டும்; தீண்டாதார்கள் மக்கள் எல்லாம் வைதிகப்பார்ப்பனர்களின் வீட்டுமாப்பிள்ளைகளாகவும் மருமக்கள்களாகவும் வேண்டும். வைதிகப்பார்ப்பனர்களுடைய மக்களும் தீண்டாதார்கள் வீட்டு மாப்பிள்ளைகளாகவும் மருமக்கள்களாகவும் ஆகவேண்டும். இவ்வாறே ஒவ்வொரு சாதிகளும் தமக்குமேற்பட்ட சாதிகளுடனும், கீழ்ப்பட்ட சாதிகளுடனும் கலந்து ஒன்றாக வேண்டும். இப்படியே "டஞ்சமர்" முதல் "பார்ப்பனர்" வரையுள்ள எல்லாவகுப்புகளும் கலந்து ஒன்றாகும் வரையிலும், ஜாதிகள் ஒழியாது; தீண்டாமையும் ஒழியாது.

இன்று இக்காரியங்களுக்குத் தடையாய் இருப்பன, இந்துமதமும், அதிலுள்ள வேத, புராண, இதிகாச சாஸ்திரங்களும், அவைகளைப்படித்து விட்டுச்சொந்த புத்தியில்லாதிருக்கும் திரு. மாளவியா போன்ற மண்ணுருண்டைகளுமே யாகும்.

ஆனால் இந்த திரு, மாளவியா பண்டிதர், தீண்டாதார்களுக்குக் கோவில் பிரவேசம் அளிக்க வேண்டும் என்றும், குளம், கிணறு, நடைபாதை, பள்ளிக்கூடம் முதலியவைகளில் சமத்துவம் அளிக்க வேண்டும் என்று மாத்திரம் பேசுகிறார். இதன் பொருட்டுத்தென்னாட்டிற்கும் பிரசாரம்பண்ண வரப்போகிறாராம். அவர் தென்னாட்டிற்கு வருவாரானால் கட்டாயம் அவமானப்படுவார் என்று மாத்திரம் தெரிவிக்க விரும்புகிறோம்.

சாதிகள் ஒழியாமல்—சாதிகட்டுப்பாடுகள் அழியாமல்—வருணாச்சிரம தருமம் மாளாமல்—திருமாளவியா சொல்லும் தீண்டாமை ஒழியப்போவதில்லை; ஒருசமயம் சட்டத்தின்மூலம் கோயில் பிரவேசம், மற்றும் பொதுஸ்தாபனங்களில் சம உரிமை முதலியவைகளைஏற்படுத்தாமலும் அதனால் தாழ்த்தப்பட்டார்க்கு எள்ளத்தனையும் நலங்கிடைக்கப் போவதில்லை. உயர்ந்த வகுப்பினர் என்பவர்கள் வாயில்லாப் பூச்சிகளாகிய அவர்களை இன்னும் ஈவிரக்கமின்றிக்கொடுமைப்படுத்தவே முன்வருவார்கள் என்பது திண்ணம்.

தீண்டாமை ஒழிவதற்காக "இன்னொருமுறை பட்டினிகிடக்கப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும், திரு காந்தியடிகளும் இதே கொள்கையுடையவர்தான் என்பதை நாம் இப்பொழுது கூறவேண்டியதில்லை. நமது "குடி அரசு" வாசகர்களுக்கெல்லாம் நன்றாய்த்தெரிந்த விஷயமாகும். ஆகையால் தான், திரு காந்தியார், திரு மாளவியா போன்றவர்களின் ஆதிக்கத்தில் உள்ள "காங்கிரஸ்" சபையில் மதப்பாதுகாப்பையும், ஜாதிப்பாதுகாப்பையும், சாஸ்திரப்பாதுகாப்பையும், நாகரிகப்பாதுகாப்பையும் திட்டங்களாக அமைத்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் முன்பே பலதடவைகள் விளக்கிக் கூறப்பட்ட விஷய

மாகும். ஆகையால், தற்போதைய கொள்கையை யுடைய காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்கும் வரையிலும் திரு காந்தியார், திரு பண்டித மாளவியா போன்றவர்கள் காங்கிரசைக்கைப்பற்றிக் கொண்டிருக்கும் வரையிலும் —ஜாதியோ, வருணாச்சிரம தருமமோ, ஜாதிக் கட்டுப்பாடோ, தீண்டாமையோ ஒழிவதற்குச் சிறிதும் வழியேயில்லை யென்று சத்தியமாகக் கூறுவோம்.

இது நிற்க, இனி, திரு மாளவியா அவர்களும் திரு காந்தி அவர்களும் சொல்லுகிறபடியாவது, கோயில்களிலும்' குளம் கிணறு நடைபாதை பள்ளிக்கூடம் முதலியவைகளிலுமாவது தீண்டாதார்க்குச்சமவுரிமையளிக்க நமது நாட்டு வைதீகர்கள் சம்மதிப்பார்களா என்று கேட்கின்றோம். தமிழ் நாட்டில், இப்பொழுதே எங்கும், பகுத்தறிவற்ற மண்ணுருண்டைக் கூட்டத்தார், மதம் போச்சு, சாஸ்திரம் போச்சு பழக்க வழக்கம் போச்சு" என்று கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள். சில தினங்களுக்குமுன் (2—10—32) தஞ்சையில், வாயளவில் வைதிகம் பேசும், வக்கீல் பரர்ப்பனர்கள் கூடிய வருணாச்சிரம தருமக் கூட்டத்தில், தீண்டாதார்க்குக் கோயில் பிரவேசம் அளிக்கும் ¦விஷயத்தைக்கண்டித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அக்கூட்டத்தினர், கோயில் பிரவேசத்தின் பொருட்டு, குருவாயூரில் திரு. கேளப்பன் அவர்கள் உண்ணு விரதம் இருந்ததைக் கண்டித்தும், கள்ளிக்கோட்டை சாமொரின் அவர்கள் குருவாயூர் கோயிலைத்தீண்டாதார்களுக்குத் திறந்து விடாமலிருந்த செய்கையைப் பாராட்டியும், தீண்டாமையை ஒழிக்க முயலுவதும், கோயில் பிரவேசமளிக்க முயலுவதும் இந்துமத ஆகம, வேத, புராண சாஸ்திரங்களுக்குப்பொருத்தமுடையதல்லவென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றார்கள். இன்னும், கோயில் பிரவேசத்தின் பொருட்டுச் சென்னைச் சட்டசபையில் சட்டம் நிறைவேற்ற அனுமதியளிக்கக் கூடாது என்று கவர்னர் வைசிராய் முதலியவர்களை வேண்டிக் கொள்ளுவதாகம் தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள்.

மற்றொரு வைதீகராகிய திரு ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில் அரசாங்கமே கவனம் செலுத்திவரும் சுதேச முஸ்லிம் சமஸ்தானமாகிய ஹைதராபாத்திற்குப் போய், தீண்டாமை விலக்குக்கு எதிர்ப்பிரசாரம் பண்ணுகிறார். ஹைதராபாத்தில் சென்ற 30—9—32ல் கூடிய வக்கீல்களின் மகாநாட்டில், திரு. ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் தலைமை வகித்துப் பேசும்போது,

"சமூக, மத சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடக்கூடாது"

என்றும்,

"இந்து மதமும், இஸ்லாம் மதமும் கடவுளால் வெளியிடப்பட்ட மதமாதலால் இவைகளில் சட்டத்தைப் புகுத்துவது சரியாகாது"

என்றும் வைதீகப்பிரசாரம் பண்ணியிருக்கிறார். திரு. ஆச்சாரியார், இந்து மதத்துடன் முஸ்லிம் மதத்தையும் சேர்த்துக்கொண்டு பேசியது, முஸ்லிம் மதத்தைப்பற்றி அவருக்குள்ள கவலையைக்காட்டவா? அல்லது ஹைதராபாத் அரசாங்கத்தாரை ஏமாற்றவா? என்று கேட்கின்றோம்.

இன்னும் வைதிகப்பார்ப்பனர்களுடைய பிடிவாதத்தை அறிய வேண்டுமானால் சில நாட்களுக்கு முன், ஒரு பிரபலமான தமிழ் தினசரி ஒன்றில், பார்ப்பன கனபாடி ஒருவர் எழுதியிருக்கும் ஒரு கட்டுரையில் உள்ள சில விஷயங்களைக் கவனித்தால் உண்மை விளங்கும். அவை:—

"ஒரு வகுப்பாரது நோக்கத்தை நிறைவேற்ற இன்னொரு வகுப்பாரது உணர்ச்சி பாதிக்கப்படலாகாது. நமது தேசத்தவர் "ஹிந்துக்கள்" என ஒரு வழிப்பாடாய் அழைக்கப்பட்டாலும், வெவ்வேறு வகுப்புக்களையும் அவ்வகுப்பிற்குரிய வாழ்க்கையையும் உடையவர்களாகவேஇருக்கின்றனர். ஒரு வகுப்பாரைப்புண்படுத்திப்பட்டினி கிடந்து ஒன்றைப் பெறுவது சிலாக்கியமல்ல"

என்று குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு, தற்போதிருக்கும், ஜாதிவித்தியாசங்களும், பழக்க வழக்கங்களும் மாற்றுவதும், மாற்றுவதற்கு முயலுவதும் சரியல்ல என்பதே வைதீகர்களின் எண்ணம் என்பதை உணரலாம். ஆகவே, இனி திரு. காந்தியவர்கள் பட்டினி கிடந்தாலும் அதைஎந்த வைதீகரும் ஆதரிக்கப்போவதில்லையென்பதையும் இப்பொழுதே நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். மேலும்,

"உத்சவ காலங்களில் சுவாமி ஊர்வலம் வருவதும், உத்சவ முடிவில் நடத்தப்படும் ரதோத்சவமும் தாழ்ந்த வகுப்பினருக்குக் காட்சி கொடுக்கவேயென்பதை யாவரும் அறியலாம். ரதோத்சவ காலங்களில் தீண்டாதவர்கள் என்பவர்களைத்தீண்டலும் தகும் என்பது வைதீகர்களது கொள்கை. எனவே தாழ்த்தப்பட்டவர்களை இந்துக்கள் சமஉரிமை கொடுத்துச் சகோதரர்களாகவே பாவிக்கின்றனர். இப்பொழுது புதியவழியில் அவர்களைக்கோவில்களில் புகுந்து வணங்கச் செய்ய வேண்டுமெனத் தலைவர்கள் முயலுவதைக் கண்டு வைதீகர்களாகிய நாங்கள் வருந்துகிறோம்"

என்று குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு கோயில் பிரவேச விஷயத்தில் வைதீகர் கொண்டுள்ள மனப்பான்மையை அறியலாம்.

மேற்கூறிய பலவிஷயங்களையும், உதாரணங்களையுங்கொண்டு, திரு, மாளவியா பண்டிதர் பிரசாரம் பண்ணப்போவதாகக்கூறும் போலித்தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தைக் கூடஆதரிக்க எந்த வைதீகரும் தயாராயில்லை என்பதை அறியலாம்.

ஆகவே யாரும், திரு. காந்தியோ, அல்லது, திரு. மாளவியாவோ, அல்லது காங்கிரசோ செய்யும் தீண்டாமை விலக்குப்பிரசாரத்தைக்கண்டு ஏமாறவேண்டாம், தீண்டாமை ஒழிப்புப்பிரசாரம் பண்ணும் காங்கிரஸ் பார்ப்பனர்களை, "ஜாதிகளை அழிப்பதற்கும் ஜாதிக்கட்டுப்பாடுகளை அழிப்பதற்கும், காரணமாகஇருக்கும் கலப்புமணத்தையும், சமபந்திபோஜனத்தையும் ஒப்புக்கொள்ளுகிறார்களா" என்று கேட்டால் அவர்களுடைய குட்டு வெளிப்பட்டுப்போகும். சமபந்திபோஜனத்திற்கு அனேகர் ஒப்புக்கொண்டாலும், கலப்புமண விஷயத்தை ஒப்புக்கொள்ளத்துணியமாட்டார்கள். இதற்கு நமது நாட்டுப்பார்ப்பனர்கள் சிலர் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டாலும், திரு. மாளவியாபோன்ற வைதீகர்கள் ஒருநாளும் ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள் ஆகையால் எல்லோருக்கும். இந்துமதப்பிரசாரம் பண்ணும் காங்கிரசிடமும் அதன்பிரச்சாரகர்களிடமும் ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கை செய்கின்றோம்.

---

தோழர்

## ஆர். கே. சண்முகம்

நமது இயக்கத்தின் உண்மையான தோழரும், நமது சுயமரியாதைச் சங்கத்தின் தலைவரும் ஆகிய தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள், ஒட்டவா மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்று விட்டு 5-10-32ல் சென்னை வந்து சேர்ந்து, தமது சொந்த ஊரையடைந்தார். தோழர் சண்முகம் அவர்களின் பிரயாணம் வெற்றியோடும், மகிழ்ச்சியோடும் முடிந்ததைக்கண்டுநாம் மிகுந்த களிப்படைகின்றோம். சென்ற பல மாதங்களாக, நமது இயக்கத்தோழர்களான ஆர். கே. சண்முகம், ஈ. வெ. ராமசாமி, எஸ். ராமநாதன் ஆகியவர்கள் நம்மை விட்டுப் பிரிந்திருந்ததால் நமது தோழர்கள் அனைவரும் எப்பொழுது அவர்கள் வாருவார்கள்! என்று ஆவலோடும், பரபரப்போடும் எதிர்பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்தனர். ஆகவே நமது ஆவலும் பரபரப்பும் ஒருவாறு சமாதானமடைய தோழர் ஆர். கே. சண்முகம் வெற்றி முகத்துடன் வந்து சேர்ந்தார். மற்ற இரு தோழர்களும் இன்னும் சில தினங்களில் வந்து சேர்ந்து நம்மை மகிழ்விப்பார்களென்று நம்புகின்றோம்.

---

## சாமிகள் களவு போயின.

### ரூ. 28000 நஷ்டம்.

புனா நகரிலுள்ள பிரசித்தி பெற்ற பார்வதி விக்ரகமும், கணபதி விக்ரகமும் களவு போயிற்றும். இரண்டும் தங்கத்தால் செய்யப்பட்டவை. முறையே 1240, 686 தோலா எடையுள்ளதாம். சுமார் 28000 ரூ. என்று மதிப்பிடப்படுகிறது.

---

### கூத்தூரில் சுயமரியாதை திதி.

நாகை சுயமரியாதைச்சங்க அங்கத்தினரான கூத்தூர் எஸ். சாமிநாதன் அவர்களின் தந்தையார் காலஞ்சென்ற ஞாபகார்த்தமாக 1-10-32ந் தேதி ஜாதிபேதமின்றி யாவருக்கும் சமபந்தி விருந்து நடத்தினர் என ஒரு நிருபர். எழுதுகிறார்.

## ஆலந்தூரில் சுயமரியாதைப் பிரசாரம்.

சென்னையை அடுத்த பறங்கி மலையின் பக்கத்தில் உள்ள ஆலந்தூரில் "சரஸ் வதி இலக்கிய சங்க"த்தின் ஆதரவில் 2-10-32 ஞாயிற்றுக்கிழமைமாலை 5-மணிக்கு ஒரு கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்திற்கு உள்ளூரிலிருந்து சுமார் 250க்கு மேற்பட் மக்கள் வாலிபர்களும், பெரியோர்களும், பெண்களுமாகக் கூடியிருந்தனர். சென்னையிலிருந்து தோழர்களான. இந்திராணி பாலசுப்பரமணியம், குஞ்சிதம், குருசாமி, சாமி. சிதம்பரனூர் முதலானவர்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்குத்திரு. குருசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரைகூறி அமர்ந்த பின், திருமதி, இந்திராணி பாலசுப்பிரமணியம், திரு. சாமி சிதம்பரனூர், திருமதிகுஞ்சிதம் ஆகியவர்கள் 'இளைஞர்களும்சமூகசேவையும்'என்பதுபற்றி, பேசும்போது இளைஞர்கள், யாருடைய தயவுதாட்சண்யங்களுக்கும் கட்டுப்படாமல் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும், மதம், வேதம், சாதி, பழக்க வழக்கங்கள் சடங்குகள் முதலியவைகளை ஒழித்துச் சன சமூகத்தை ஒற்றுமை யோடும் சௌக்கியத்தோடும் வாழும் படி செய்ய முன்வர வேண்டு மென்று வற்புறுத்திப் பேசினர்கள். கடைசியாகத் தலைமை வகித்த திரு குருசாமிஅவர்களும் மிகுந்த வீர உணர்ச்சியுடன் சுயமரியாதை க்கொள்கைகளைப் பற்றிப் பேசினர். கடைசியில் இரவு9 மணிக்கு தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோ பசாரம் கூறப்பட்டுக் கூட்டம் முடிந்தது.

(ஒரு நிருபர்.)

---

## கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

### நீதிக்கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்க்கக்கூடாது.

2—10—32 தேதி ஞாயிறன்று மாலை 7 மணிக்கு ஷை சங்கத்தின் வாராந்திரக்கூட்டமொன்று ஷை சங்கக்கட்டிடத்தில் சங்கத் துணைத்தலைவர் தோழர் ஆர். நஞ்சையா முனிசிபல் கவுன்சிலர் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோழ்து தோழர் வி. ரங்கராஜுலு அவர்கள் "தாழ்த்தப்பட்டவர்களும் பூனு ஒப்பந்தமும்" என்னும் பொருள்பற்றி பேசினர். அதைத்தழுவி தோழர்கள் வி. சுப்பிரமணியம், சி. கே. சந்தானம் ஆகியவர்கள் பேசினர்கள். பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அது வருமாறு:—

நமது சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் நமது சங்கத்திற்கு செய்து வந்த அரிய ஊழியத்தைப்பாராட்டுவதோடு தற்சமயம் உடல்சரியில்லாது மருத்துவர்களபிப்பிராயப்படி குன்னூரில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் அவர் மீண்டும் குணமடைந்து பழையபடி சங்கத்திற்கு தொண்டு செய்யவேண்டுமென்றும், முன் அறிவித்திருந்தபடி காலஞ் சென்ற திரு. வி. அருணாசலம் அவர்களின் பெயரால் "அருணாசல இலவச இரவு வாசகசாலை"யை சங்கத்தலைவர் குணமடைந்து வந்த பின்னரே துவக்கவேண்டுமென்றும், நமது சங்கத் துணைத்தலைவர் தோழர் ஆர். நஞ்சையா அவர்கள் கோவை நகராண்மைக் கழகத்தில் தீண்டாதாரை அனுமதிக்காத காப்பி, சாப்பாட்டு ஓட்டல்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படாதென்று கொண்டு வந்து நிறைவேற்றியதற்குச் சங்கம் பாராட்டுகிறதென்றும், ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனரைச்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்த காரியக்கமிட்டியாரைக் கண்டிப்பதுடன், வரும் தஞ்சை மகாநாட்டில் ஷை தீர்மானம் வருமானல் அது நிறைவேருமல் செய்யுமாறு பார்ப்பனரல்லாத வாலிபர்களை இச்சங்கம் வேண்டிக்கொள்கிறதென்றும் தீர்மானிக்கிறதென்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதென காரியதரிசி எழுதுகிருர்.

---

## "குடி அரசு" இனும்!

"புதுவை முரசு" முழக்கம் 1 ஒச்சு 1, 2, 5, 6, 12, 14. முழக்கம் 2. ஒச்சு 24. சண்டமாருதம் வார அனுபந்தம் 10, 11, 12, 13, 23. ஆகிய பத்திரிகைகளில் கிடைத்தவற்றை அனுப்புபவர்களுக்கு இரட்டிப் புக்கிரயமோ, "குடி அரசு" பதிப்பக வெளியீடுகளோ இஷ்டப்பட்டதை இனுமாகக் கொடுக்கப்படும். ஷை எல்லாப்பத்திரிகைப் பிரதிகளையும் அனுப்புவோருக்கு ஒருவருடத்து "குடி அரசு" இனுமாகத் தரப்படும்.

தமிழ்க் கலா நிலையம்,
காயாமொழி
திருநெல்வேலி ஜில்லா.

---

## டெண்டர்கள் தேவை.

ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஹாலுக்கு மெத்தைவைத்த நாற்காலிகள், மேஜைகள் முதலியவை சப்ளை செய்ய 20—10—32 தேதிக்குள் ரூ 50—டிபாசிட்டுடன் சீல்செய்த டெண்டர்கள் தேவை. பிளான் முதலிய விபரங்களைப்பற்றி முனிசிபல் ஆபீசில் தெரிந்துகொள்ளலாம். ஷை டெண்டர்கள் ஷைதேதிக்குப் பின் முனிசிபல் ஆபீசில் திறக்கப்படும், எந்த டெண்டரையும் ஒப்புக்கொள்ளவோ தள்ளுபடிசெய்யவோ சேர்மன் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மன்.

---

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-௵ S. C. No. 392.

அவனாசி தாலூகா கஸ்பா சேவூரிலிருக்கும் ராமகிருஷ்ண நாயக்கன் மகன் அப்புச்சாமி என்கிற செல்வனாயக்கன்—வாதி.

அவனாசிதாலூகா சேவூர்கிராமம் மஜரா சாலைப்பாளையத்திலிருக்கும் ரங்க மூப்பன் மகன் அப்பா மூப்பன்—1ம் பிரதிவாதி.

ஷை நெம்பரில் வாதிக்குப் பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பிராம்சரி நோட்டின் பேரில் அசல் வட்டி உள்பட ரூபாய் 86-0-0 மும் கோர்ட்டு செலவும் கிடைக்க வேணுமாய் தாவா செய்து அது வாய்தா 21—10—32 தேதி போட்டிருக்கிறது. ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் ஷை தேதியில் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினல் ஒரு கட்சியாய் தீர்மானம் செய்து விடுவார்கள் என்ற விவரம் அறியவும்.

G. ஏசுரத்தினம் B. A. B. L.
வக்கீல்.

திருப்பூர், 1-10-32.

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-௵ E. A. No- 1234.
1932-௵ E. P. No. 774.
1930-௵ O. S. No. 228.

ராமசாமிக் கவுண்டன்—வாதி.

பல்லடம் தாலூகா மண்ணரை கிராமம் மஜரா பாப்பனாயக்கன் பாளையத்திலிருக்கும் சுக்காக் கவுண்டன் மகன் முத்துசாமிக்கவுண்டன்—5ம் பிரதி வாதி.

ஷை E. P. நெம்பரில் ஷை வாதி டிக்ரியில் கண்ட அடமான சொத்துக்களை விற்பனைக்காகமனுச்செய்துகொண்டிருக்கிறபடியால் விற்பனை இஸ்திஹாரின் ஷரத்துக்களைதீர்மானிப்பதற்காக 1932௵ அக்டோபர் மீ 24 தேதி வாய்தா போட்டிருக்கிறது. ஷைதேதியில் ஆக்ஷேபணையிருந்தால் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பக்ஷத்தில் ஒரு கட்சியாய் தீர்மானம் செய்து விடுவார்கள் என்கிற சங்கதி அறியவும்.

G. ஏசுரத்தினம் B. A. B. L.
வக்கீல்.

திருப்பூர், 1-10-32.


புருஷர்களுக்கு அசக்தியை போக்கடித்து புருஷத்துவம் தாதுபுஷ்டி ஜீரணசக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் டானிக்.

**மன்மத குளிகை**

எந்தக்காரணத்தினுலும் இழந்தபலம், தாது நஷ்டம் போகசக்திக்குறைவு, மன உற்சாகம், இவைகளை திரும்பக் கொடுத்து இல்லற ஒற்றுமை வீரியவிர்த்தி முதலியவைகளைக்கொடுப்பதில் இணையற்றது. 20 குளிகை ரூ. 2—0—0 60 குளிகை ரூ. 5—0—0.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.


## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர். மணியம் பிரதர்ஸ், ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபனாசம். அப்துல்ரசாக் சாயபு, இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே.எல்லப்பன், திருப்புக்குடல் வீதி.

கோயமுத்தூர். வி. ரங்கராஜுலு, நியூஸ் எஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா, தனலட்சுமி விலாஸ் பேங்க், செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பனை செய்ய தகுந்த டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் சென்னைக்கும், மதுரைக்கும் தேவை. இது சமயம் ஷை நகரங்களில் 150 பிரதிகளுக்கு மேல் செலவாகிவருகிறது. கமிஷன் 100க்கு 25. மற்ற விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.
"குடி அரசு" ஈரோடு,

## சென்னையில் பொதுக்கூட்டம்.

### திரு. பா. தாவுத்ஷா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### சுயமரியாதைத் தோழர்களின் பிரசங்கம்.

சென்ற 5—10—32 புதன்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை கொண்டித்தோப்பு சிவஞானம் பார்க்கில் தாராளச்சிந்தனைச் சங்கத்தாரின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு 500க்கு மேற்பட்டமக்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு திரு. என். தண்டபாணி அவர்கள், திரு. பா, தாவுத்ஷா பி. ஏ. 'தாருல் இஸ்லாம்' ஆசிரியர் அவர்களைத்தலைமை வகிக்கும்படி பிரேரேபிக்க திரு. பண்டிதர் பா. பக்கிரிசாமி அவர்கள் ஆமோதிக்க திரு. தாவுத்ஷா அவர்கள் தலைமையேற்ருர்.

அவர் தனது முன்னுரையில் தாராள சிந்தனைச்சங்கத்தில் யாருக்கும் ஒரு கட்டுப்பாடு இல்லாமல் தமது மனத்தில்தோன்றிய எண்ணங்களைத்தாராளமாகப்பேச உரிமையுண்டென்று கூறி பிரசங்கியார்களாக வந்திருந்த திரு. சாமி சிதம்பரனுர், திரு. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல்., திரு. குருசாமி பி. ஏ., முதலியவர்களைக் கூட்டத்திற்கு அறிமுகம் செய்துவைத்து, முதலில் திரு. சாமி சிதம்பரனுர் அவர்களைப்பேசும்படி கேட்டுக்கொண்டார். பிறகு திரு. சிதம்பரனுர் அவர்கள் முன்னமே குறிப்பிட்டிருந்த விஷயமாகிய 'இந்திய நிலேயும், இளைஞர் கடமையும்' என்பதுபற்றி தற்காலத்தில் காங்கிரசார் தீண்டாமையை ஒழிக்கப் பிரசாரம் புரிவதில் உள்ள சூழ்ச்சிகளைப்பற்றியும், திரு. காந்தியார் உண்ணுவிரதம் இருந்ததைப்பற்றியும், திரு. மாளவியாவின் குட்டிக்கரணத்தைப்பற்றியும், மற்றும் நமது நாடு அடைந்திருக்கும் தாழ்ந்த நிலேயைப்பற்றியும் அதை நீக்குவதற்கு இளைஞர்கள் முன்வரவேண்டும் என்றும் சுமார் 1-மணி நேரம் பேசினுர்.

அதன்பின் திரு. முத்துசாமி வல்லத்தரசு அவர்களைப்பேசும்படி தலைவர் கேட்டுக்கொள்ள அவர் எழுந்து பார்ப்பனர்கள் சடங்குகளின் பேரால் நம்மவர்களை ஏமாற்றிப் பொருள்பறிப்பதைப் பற்றியும், கிராமாந்திரங்களில் உயர்ந்த சாதி மக்களால் தாழ்த்தப்பட்ட மக்கள் படும் கஷ்டங்களைப்பற்றியும் மற்றும் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்களை அடிமைப்படுத்தியிருக்கும் சூழ்ச்சிகளைப்பற்றியும் ஒரு மணிநேரம் பேசினுர்.

அதன்பின் திரு. குருசாமி அவர்களைப் பேசும்படி தலைவர் கேட்டுக்கொள்ள அவர் எழுந்து மிகவும் உணர்ச்சியுடன் நமது நாட்டின் வறுமையைப்பற்றியும் அதற்குக்காரணமாக இருக்கும் பண்டிகைகளின் மோசங்களைப்பற்றியும், திருப்பதி முதலிய கோயில்களில் நடைபெறும் அக்கிரமங்களைப்பற்றியும் சங்கராச்சாரியாரின் ஏமாற்றுச்செயல்களைப்பற்றியும், பார்ப்பனர்களின் ஹிந்திப்பிரசாரப்புரட்டைப்பற்றியும், ஒருமணி நேரத்திற்கு மேல் பேசினுர். கடைசியாகத்தலைவர் திரு. தாவுத்ஷா அவர்கள் காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சிகளையும், இந்துக்களிடமும், முஸ்லீம்களிடமும் உள்ள மூடநம்பிக்கைகளையும் எடுத்துக் கூறி எந்த விஷயங்களையும் ஆராய்ந்து பகுத்தறிவுக்கேற்றதை ஒப்புக்கொள்ளுவதே இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வழியாகும் என்றும் கூறினுர். பிறகு வந்தனேபசாரத்துடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

(ஒரு நிருபர்.)

---

## நோட்டீஸ்.

### உடுமலேப்பேட்டை டி. மு. கோர்ட்டு.

1931-ஆம் O. S. No. 1108.
1932-ஆம் I. A. No. 1461.

இராமசாமிக்கவுண்டர்—வாதி.

சின்ன காளியப்ப கவுண்டன் 1, பழனிக்கவுண்டன் 2, இரங்கசாமிக்கவுண்டன் 3, பெரிய காளியப்ப கவுண்டன் 4—பிரதிவாதிகள்.

ஷை நெம்பர் 1ம் பிரதிவாதி பொள்ளாச்சி தாலூகா பழயூர் மஜரா நாச்சிபாளையத்திலிருக்கும் பழனிக்கவுண்டன் மகன் சின்ன காளியப்ப கவுண்டனுக்கு வாதியின் அட்வகேட் என். மௌன குருசாமி நாயுடு பி. ஏ. பி. எல் தெரிவிக்கும் நோட்டீஸ்.


ஷை நெம்பரில் வாதி உங்கள் வகையறு பேரில் பிராம்சரி நோட்டுப்படி ரூபாய் 681—0—0ம் இதின் வட்டியும், கோர்ட்டு செலவும் வரவேணுமாய் தாவா செய்தும் உங்களுடைய சொத்தை முன்னுடி ஜப்தி செய்யவேணுமாயும் மனுக்கொடுத்து அது 19-10-32 தேதி வாய்தா போட்டிருக்கிறது. ஷை வாய்தாவில் உமக்கு ஏதாவது ஆக்ஷேபனையிருந்தால் ஷை கோர்ட்டில் காலே 10 மணிக்கு ஆஜராகித்தெரிவித்துக்கொள்ளவும். தவறினுல் உம் பேரில் ஒரு கட்சியாக தீர்ப்பும், ஜப்தி உறுதியும் செய்யப்படும் என்கிற விபரம் இதன் மூலமாய் தெரிவித்திருக்கிறேன்.

என். மௌனகுருசாமி நாயுடு,
அட்வகேட்
உடுமலேப்பேட்டை, 6-10-32.


ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லே, ஆச்சரியமில்லே, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இலந்து பூத்த புஷ்பங்களின் சத்து)




மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணு. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3 அணு மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப்பௌண்டன் பேனு 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட் வாச் 1-ம், இனமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.

விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 9C,
Calcutta.



ரூ. 2-14-0 க்கு 6-பாட்டல்

ஓட்டோ வாங்குபவர்களுக்கு 3-கடியாரங்களும், 1-பவுண்டன் பேனுவும், 94-சாமான்களும் இனம்.



நமது புகழ்பெற்ற "ஓட்டோ மோட்டியா" ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குபவர்களுக்கு 3 கடியாரங்களும், 1 ரயில்வே டைம் டம்மி பாக்கெட் கடிகாரமும், 5 வருஷம் உத்திரவாதமுள்ள நல்ல யந்திரங்களுள்ள 'பி' டைம்பீஸ் 1-ம், கோல்ட்கில்ட் டம்மி ரிஸ்ட் வாட்ச் 1-ம், அழகான 14Kt. தங்க நிப் பவுண்டன் பேனு 1-ம், மோதிரம் 1-ம், 94 படங்களும் இனம் கொடுக்கப்படும் பாக்கிங் தபால் செலவு வேறு.

The Indian National Stores,
17. Joy mitter St.. Calcutta.



மலேயாளம் சில்க் & சேலேகள்.

2½ வீதி 5 நீளம் பட்டு 1-க்கு ரூ. 1—8—0
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு ரூ. 15—0—0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ. 3—8—0
2½×12 நீளம் லேட்ரோஸ் சேலே 1-க்கு ரூ. 3—8—0
ஷை 11 நீளம் சேலே 1-க்கு ரூ. 4—8—0
இதில் எல்லா கலர்களில் கிடைக்கும்.

தீபாவளி பண்டிகைக்கு ஸ்பெஷலாய் தயார் செய்கிறேம்.
S. K. R. வீவிங்பாக்டரி, கோட்டார், திருவிதாங்கூர்.

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தாரின் செயலைக்கொண்டு எவரே அவர்களை நாஸ்திகரென்று நவில வல்லார்? தன்மதிப்பு இயக்கத்தின் கொள்கையன்றோ உலகிற்கொரு ஒப்பற்ற ஆங்கிலக்கவிஞராய் விளங்கும் ரவீந்திர நாத்தாகூர் "எனக்கு உருவவழிபாட்டில் சிறிதும் நம்பிக்கையில்லை. வணக்கம் வேண்டாம். கோயில் சென்று கும்பிடவேண்டாம். சாம்பிராணி முதலிய செலவுசெய்து வணக்கம்புரிய வேண்டாம் தாழ்த்தப்பட்டவர்களையும் தீண்டாதவர்களென்று கொடுமைசெய்யப்பட்டவர்களையும் நெற்றி வேர்வை நிலத்தில்சிந்த சரீரத்தால் வயல்களில் பாடுபட்டு உழைக்கின்ற ஏழைகளையும்பார், அவர்களைக் கவனிப்பதில் கடவுளைப்பார்" என்று கூறுவதில் யாது தவறுளது? எனவே சுயமரியாதை இயக்கத்தார்கள் செயலில் ஆஸ்திகராயிருக்கின்றார்களா? நாஸ்திகராயிருக்கின்றார்களா என்றே அறிவுடையவர்கள் ஆராயவேண்டும். அஃதன்றி அவர்கள் சொல்லிற்கு தவறான பொருள்கொண்டும் அவர்களின் வேடத்தைக்கொண்டும் முடிவு கட்டல்தகாது.

இஃது இங்ஙன மிருக்க, தென்னாட்டிலே ஒப்பற்ற முஸ்லிம் பகுத்தறிவுப்பத்திரிக்கையாய் விளங்கும் தாருல் இஸ்லாம் என்னும்வாரவெளியீட்டின் ஆசிரியரும், நம் அன்பிற்கு முற்றும் பாத்திரராயிருக்கும் தோழர் பா—தாவூத்ஷாசாஹிப் அவர்கள் 1—7—32ல் வெளியான தம்பத்திரிதிரிகையில் "காபிரினும் நாஸ்திகர் கல்லவரே!" என்ற தலையங்கத்தின் கீழ் "இத்தமிழ் நாட்டின் கண் ஈரோட்டு இராமசாமிப்பெரியாரால் சுமார் ஏழாண்டுகளுக்கு முன்னே நிறுவப்பட்ட சுயமரியாதை இயக்கம் என்பதை அறியாதார் நம் நண்பர்களுள் எவருமிரார் என்றே எண்ணுகின்றேம். அன்னவரின் சுயமரியாதை இயக்கத்தில் நாஸ்திகமென்பது ஒருமூலக் கொள்கையாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதாய்யாம் அப்பெரியாரிடமிருந்து தெரிந்துகொள்ளமுடியவில்லை. அவருடைய பிரசங்கம் சிலவற்றையாம் செவிமடுத்ததிலிருந்து அன்னவர் தமது இயக்கத்தில் தெய்வம் உண்டென்பவர்களும், தெய்வம் இல்லையென்பவர்களும் சரிசமானமாகவே அங்கம் வகித்திருக்கலாமென்று கூறியிருப்பதாகவே அறிகின்றோம். தெய்வமிருந்தால் இருக்கட்டும்; அதற்காக நாம்கவலைப்பட வேண்டுவதின்று, ஆனால்அத்தெய்வத்தின் பெயரால் மனிதர்களை மனிதர்கள் ஏமாற்றிப்பொருள் பறிப்பதையும், அடக்கி யொடுக்கி சவாரிசெய்வதையுமே கண்டிக்கவேண்டுமென்றே அன்னவர் கூறிவருகின்றார்."

மனிதனினும் தாழ்ந்துகிடக்கும் மிருகங்கள், உலோகங்கள், கற்கள், மரஞ்செடி கொடிகள், பாம்பு புற்றுகள், நதிக்கரை, கடற்கரைகள், பருந்துகள், குரங்குகள். பன்றிகள், மீன்கள், பாம்புகள், புழுக்கள், சாணம் ஆகியவற்றையெல்லாம் தெய்வங்களென்று பூஜிக்காமலிருப்பதே அன்னவரின் சுயமரியாதைக்கொள்கைஎன நன்கெடுத்துக்காட்டுகின்றது. ஆதலினாற்றான் அந்தப் பு—ம— ஆஸ்கர்களைப்பார்க்கினும் இந்த சு—ம—நாஸ்திகர்கள் என்பவர்கள் தன்மதிப்புள்ளவர்களாகவும் மானுஷீகத்தன்மை வாய்ந்தவர்களாகவுமே காணப்படுகின்றனர்.'

என்று எழுதிவிட்டு, 19—8—32ல் ஸயன்ஸ் ஞானமும் ஆஸ்தீகவாதமும் என்ற தலையங்கத்தின் கீழ் "ஸயன்ஸ் வாதங்களுள்நாஸ்திகத்தையே மேற்கொண்டிருக்கும் ஒரு சில கிரந்தங்களைப்பின்பற்றியே இக்கால நாஸ்திகர்கள் தெய்வமே இல்லையென்று விவாதித்து வருகின்றனர். இத்தகையினருள் சேர்ந்தவர்களேநம் ஈ. வெ. ராமசாமிப்பெரியாரைப்பின்பற்றியொழுகும் தென்னாட்டுச் சுயமரியாதைக்காரர்களுமாவார். இக்கொள்கையினைப்பின்பற்றியே 'குடிஅரசு' முதலிய சு. ம. பத்திரிகைகளில் பலர் கட்டுரைகள் வரைந்து வருவதை நம் நேயர்கள் அறிந்தேயிருக்கின்றனர். இன்னும் சிற்சில சமயங்களிலும் சுயமரியாதை இயக்கத்தை நாஸ்திக இயக்கமென்று பிரசாரஞ் செய்ய முற்பட்ட இரகசியமிஃதென எனக்கு விளங்கவில்லை." இவ்வாறுஆசிரியர் எழுதியதிலிருந்து தாருல் இஸ்லாம் பத்திரிகையில் சிற்சில வினைக்களும் என். ஏ. ஏ. கரீம் போன்ற தோழர்களால் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையை உணராது வரைந்திருக்கும் கட்டுரையிலிருந்து நம் நாட்டு முஸ்லிம்களிடையே பகுத்தறிவு என்னும் ஞான ஜோதியை வளர்க்க முனைந்த "தாருல் இஸ்லாம்" வீணை தர்க்கங்களில் மாட்டிக்கொள்ளப் போவதாய் விளங்குகின்றது. இதனால் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை அறிந்தோ அறியாமலோ பல முஸ்லீம் வாலிபர்கள் கட்டுரைகள் எழுதவும் சுயமரியாதை இயக்கத்து யுவர்கள் இஸ்லாத்தைப் பற்றியோ முஸ்லிம்களைப்பற்றியோ கட்டுரைகள் எழுதவும், அதனால்வீண் தர்க்கங்களும்விவாதங்களும் உண்டாகும்படி மக்களைத் தூண்டியதாகுமல்லவா? யான் இவ் இவ்வாறு கூறுவதனால் தாருல் இஸ்லாம் நண்பர்கள் வினாவிற்கு சுயமரியாதைக்காரர்கள் விடை கூற முடியாதென்றோ, அன்னார் நாஸ்திகர் என்று கூறிவிடுவதனால் தன்மதிப் பியக்கத்தார்கள் பயந்து விடுவார்களென்றோ எவராவது எண்ணுவது பெரும் அறியாமை யென்று எச்சரிக்கின்றேன். பகுத்தறிவை நாட்டில் வளர்த்து எங்கும் சாந்தியும் சமத்துவமும் பெருக உழைக்கும் இரு பத்திரிகைகள் தங்களுடைய ஆக்க வேலையை விட்டு விட்டு, ஒருவர் மேலொருவர் வசைபுராணம் பாடி வீணை தர்க்கத்தில் ஏன் சிக்கிக் கொள்ள வேண்டும்? இருபத்திரிகைகளும் ஒன்றையொன்று தாக்காது தங்கள் தங்கள் நோக்கத்தை பிரசாரஞ் செய்து கொண்டு போகட்டும். இதுவரை "குடி அரசு" "தாருல் இஸ்லாத்தை" வலியசண்டைக்கிழுத்தது கிடையாது. அவ்வாறிருக்க தாருல் இஸ்லாம் என் பயனற்ற வாதங்களில் தலையிடவேண்டுமென்று அப்பத்திரிகையைப் பன்முறையும் வினவுகின்றேன்.

தாருல் இஸ்லாம் வாசகர்களே! "குடி அரசு" நாஸ்திகர்களை அவர்கள் கொள்கைகளைக் கூற தம்மிதழில் இடங்கொடுப்பதால் அதை நாஸ்திகப் பத்திரிகை யென்று கூறுவது நியாயமாகுமா? அப்படியானால் உங்கள் அன்பிற்குறிய தாவுத்ஷாசாஹிப் அவர்கள் 19—8—32ல்

"............தோழர் ம. சிங்காரவேலும் பி. ஏ. பி. எல்., (சென்னை ஹைகோர்ட் வக்கில்) "பிரபஞ்சமும் கடவுளும்' என்னும் ஆராய்ச்சி நூலொன்றும்வெளியிட்டுள்ளார். அச்சிறு நூலில் தோழர் ம. சி. தக்க ஆராய்ச்சியுடனே தமது புத்திக் கெட்டிய வரையில் சைன்ஸ் ஞானத்தைக் கொண்டு தெய்வமேயில்லை யென்று நிரூபணஞ்செய்து முடிவுகட்டியுள்ளார். எனவே, அந்நூலினை ஆஸ்திகர் நாஸ்திகர் அனைவரும் வாசித்துணர வேண்டுமென்பதே எனது ஆர்வமிக்க கோரிக்கையாகும்."

"ஆஸ்திகர்களென்போரும் அதனைப்படித் துணர்வதால் நற்பயன் பெறுவார்களென்பதே எமது திண்ணிய எண்ணமாகும்."

என்று கூறியிருப்பது கொண்டு தோழர் தாவுத்ஷா சாஹிப் அவர்களை ஸைபுல் இஸ்லாம்—இல்லை—நீங்கள் நாஸ்திகர்கள் என்று கூற முன்வருவீர்களா? எனவே இந்த வீண் ஆஸ்திக நாஸ்திகத் தர்க்கத்தில் வீணைத் தலையிட்டு உங்கள் காலத்தையும் நேரத்தையும் வீணாக்காது உண்மையான ஆஸ்திகர்களென்பதை நீங்கள் செயலில் காட்ட முன்வாருங்கள். உலகில் நாஸ்திகம் பெருகுவது ஆஸ்திகர்களினாற்றான் என்பதை சமரச நோக்குடைய பெரியார்யாரும் மறுக்கார். கடவுளின் பெயரால் எழுதப்பட்ட கட்டுக்கதைகளும் ஆபாசப் புராணங்களும் இன்று வரை நடைபெறும் கொலைகளும், உயர்வு தாழ்வுகளும் பக்தர்கள் போன்று வேடமிட்டு உலகை வஞ்சித்து மக்கள் பாலுள்ள நல்லொழுக்கத்தை வேருடன் கல்லியெறிந்து வரும் பண்டாரச்சன்னதிகளும், போப்களும் பிஷப்புகளும், மௌல்விகளும், பிக்ஷுக்களும், வேதங்களும், புராணங்களும், மூடநம்பிக்கைகளும், பழைய பழக்க வழக்கம் என்னும் பேய்களுமே காரணமென்பதை நன்றாய் ஆராய்ந்து, நீங்களாவது உங்களை உங்கள் செயலைக்கொண்டு நாஸ்திகர்கள் போற்றும்படி செய்யமுன் வருமாறு முயலும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுவே உங்களின் சிறந்த ஆஸ்திகப் பிரசாரமாகும்.

மேலும் "நாம் இன்ன மதத்தைச் சேர்ந்தவரென்று சீட்டெழுதிக் கட்டிக் கொள்வதைக் குறித்து ஆண்டவன் இப்பொழுது ஒன்றும் கேட்பதில்லை. இனியும் கேட்கமாட்டானென்றும் ஆனால் நாம் என்னவிதமாய் இருக்கிறோம், அஃதாவது என்ன செய்து வருகிறோம் என்பதைப்பற்றித்தான் அவன் இப்பொழுதும் கேட்கிறான் இனியும் கேட்பானென்றும் நான் நிச்சயமாக நம்பியிருக்கிறேன் என்பது எனக்குத்தெரியும். அவனிடத்தில் செய்கைதான் சிரேஷ்டமாகக் கருதப்படுகின்றது. ஆனால் செய்கையில்லாத வெறும் நம்பிக்கைமட்டும் அவன்பால் ஒன்றும் பயன்பெறமாட்டாது" என்றும் கூறிவிட்டு இறுதியில் மகாத்மா தன்னை ஓர் பக்கா ஹிந்து வென்று கூறிக்கொண்ட போதிலும் அவரிடம் காணப்படுஞ் செயலால் அவரை அவர் அறியாமலே தன்னையோர் முஸல்மானாக செய்துவிட்டார் என்னும் பொருள்பட "மகாத்மா உண்மை முஸ்லிம்' என்னும் தலையங்கத்தின் கீழ் தோழர் பா. தாவுத்ஷா சாஹிப் அவர்கள் தாருல் இஸ்லாத்தில் 1924ம் ஆண்டின் நவம்பர்மாத திங்கள் வெளியீட்டில் விரிவாய் கூறியதும்,

முகம்மத் நபி அவர்கள் தம் எதிரிகளுடன் செய்த போரில் கைதியாக்கப்பட்ட ஹாத்திமுடைய குமார்த்தி "ஸபானு" என்பவள் முகமத்நபியை நோக்கி, நபியே யான் யாருமற்ற அஃதியாயிருக்கிறேன், என்னை மீட்பதற்கு யாருமில்லை. என் தந்தை கீர்த்திவாய்ந்தவர், எங்கள் கூட்டத்தாரில் அரசனுக்கு சமமாய் வாழ்ந்தவர், எத்தனையோ சிறையாளர்களைப் பணம் கொடுத்து மீட்டியுள்ளார். பெண்களின் கௌரவத்தைக் காப்பாற்றியுள்ளார், ஏழைகளைப்போஷித்துள்ளார் துன்பப்பட்டவர்களுக்கு ஆறுதலளித்திருக்கின்றார். கேட்டவர்களுக்கு இல்லையென்று கூறார் என்று மொழிந்ததும் "ஒரு முஸ்லிமிடமுள்ள நற்குணங்கள் உன் தந்தையிடமிருந்தன" என்றுகூறி அப்பெண்மணியை ஸ்வாதீனமாய்ச் செய்து விட்டதோடமையாது, அப்பெண்மணியின் வேண்டுகோளின் படி அவளுடைய உறவினர்களும் சிறையினின்று விடுவிக்கப்பட்டனர் என்று உங்களின் நாயகம் முகம்மத் அவர்களின் சரித்திரம் கூறுகின்றது.

இவைகளினால் ஒருவர் நாஸ்திகராயிருப்பினும், தம்மைநாஸ்திகர் என்று நவின்று கொண்டிருந்தாலும் அவரை உலகம் ஓர் பக்கா நிரீச்சுவர வாதியென மொழியினும், நல்லொழுக்கமும் நற்செயலுமுடையவராயிருப்பின் அவர் தன்னை யறியாமலே ஒரு ஆஸ்திகராயிருக்கிறார் என்றும், உலகினர் உண்மையறியாமல் உழறிக் கொட்டுகிறார் என்றும் "குடி அரசில்" கட்டுரை எழுதுபவர்களோ அன்றி ஏனையதன்மதிப்பியக்க அன்பர்களோ மேற்கண்ட குணமுடையவராயிருப்பின் அவர்கள் நாஸ்திகர் என்று நவின்று கொண்டிருப்பினும் அறிவுடையார் அவர்கள், தங்களை யறியாமலே ஓர் உண்மை ஆஸ்திகர்களாயிருக்கிறார்கள் என்று கூறுவதில் என்ன தவறு என்று தா. இ. அன்பர்களை வினவுகின்றோம். அன்பர்களே! காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்து நேர்வழியடைவீர்களாக.

# நாட்டுக்கோட்டையார்களும், அவர்கள் கல்யாணங்களும்.

(செய்கோன் என். இராமநாதன்)

செட்டியார்கள் வசிக்கும் பகுதிகட்குச் செட்டி நாடு என்று பெயர். அப்பகுதியானது இராமனாதபுரம் ஜில்லாவிலும் புதுக்கோட்டை ஸ்டேட்டிலும் உள்ளன. இச்செட்டி நாடானது ஆதியில் தொண்ணூற்றொரு ஊர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்போது எழுபத்தெட்டு ஊர்களில்தான் இவர்கள் வசித்துவருகிறார்கள். இவர்களின் கல்யாணங்களைப்பற்றி ஈண்டு சிறிது விளக்குவாம்

ஓர் குடும்பத்தில் ஓர் ஆண்மகவு பிறக்கிறதென வைத்துக்கொள்வோம். ஐந்துவயதை அடைந்ததும் பள்ளிக்கனுப்பி சிறிது கல்வி பயின்றதும் மலாயா, பர்மா, கொச்சின், சைனா முதலிய நாடுகளில் எங்காவது ஒரு தேசத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அவன் அங்குவதியுங்கால் பெற்றோர்களால், (அவனது அனுமதி இன்றியே) அவனுக்குக்கல்யாணம் பேசிமுடிவு செய்யப்படும் அவனோ வேறு பெண்ணை எண்ணிக் கொண்டிருப்பான். பிறகு விஷயம் தெரிந்து அப்பெண்வேண்டாமென்று எவ்வளவு வெறுத்தாலும் மூடத்தாய் தந்தையர்களாகிய அவனது பெற்றோர்கள் அதற்கெல்லாம் கிஞ்சிற்றும் அசையாது அவர்கள் பார்த்தபெண்ணையே மணமுடித்து விடுவார்கள் அப்பால் இவனோ பெற்றோர்களுக்கு கட்டுப்பட்டு வெளிக்கு மட்டிலும் கல்யாணம் செய்து கொள்வானேயொழிய இவனது உள்ளார்ந்த காதலெல்லாம் இவன் முன் நினைத்திருந்த பெண்ணிடமே சென்றிருக்கும். இவ்வித மூடத்தாய் தந்தையர்களின் பிடிவாதத்தின்மேல் செய்யப்படுங்கல்யாணங்களே இன்று செட்டிமார் நாட்டில் அனந்தம். அதனால்தான் புருஷன் மனைவிகட்குள் அநேக பிளவுகள்யேற்பட்டு சதா சண்டைகள் சச்சரவுகளாகவுமே இருந்துகொண்டிருப்பதை அநேக குடும்பங்களில் காணலாம். ஏன்? காண்கின்றோம்.

இதுதான் இப்படியென்றால் பெண்ணின் நிலைமையை நினைத்தால் நெஞ்சம் குமுறுகிறது. பெண்கள் படிக்கக்கூடாது. படித்தால் கள்ளக்காதலனுக்கு கடிதம் எழுதி விடுவாள் என்றும் இன்னும் அநேக கெடுதிகள் சம்பவிக்குமென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே அவள் 'அடுப்பே திருப்பதி ஆம்படையானே குலதெய்வம்' யென்பதாகச் சொல்லும் வைதீகர் கூற்றுப்படி சதா அடுப்பையே காத்துக்கொண்டு சமையல் செய்யும் நேரம்தவிர மற்ற நேரங்களில் நாலைந்து பேர்களாகக்கூடிக் கொண்டு ஊர்வம்புகள் பேசி சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னே இவர்களின் மதியீனம் இவர்களைப்படிக்கக்கூடாது, படித்தால்க்கெட்டுவிடுவார்கள் என்று சொல்லும் வைதீகக்குடுக்கைகளே, கர்நாடகமேதாவிகளே யான் ஒன்று கேட்கின்றேன். ஐயா அறிவிற் சிறந்த பெரியோர்களே சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் பெண்களும் கண்டிப்பாகபடிக்கத்தான்வேண்டும்அவர்களுக்கும்ஆண்களைப்பொல்சம சுதந்தரத்துடன் உரிமைகள் கொடுக்கத்தான்வேண்டும். என்றால் எங்கள் மேல் சீறிவிழுகிறீர்களே, நாங்கள் செல்லுவது போல் அவர்களும் படித்திருந்தால் ஓய்வுநேரங்களில் நால்வராகக் கூட்டிக்கொண்டு சண்டை போடுவார்களா. நன்றாக யோசனை செய்து பாருங்கள். அடுத்த படியாக அவர்களின்(பெண்களின்)கல்யாணத்தை எடுத்துக்கொண்டாலோ அப்பப்பா சொல்லுந்தர தக்கதன்று. பெற்றோரின் பிரியப்படியே நடக்கவேண்டும். அதில் ஓர்ஏழை வீட்டுப்பெண்ணாக இருந்திடினோ அவள் கதி அதோகதிதான். கண்டிப்பாக அவல் அருபது வயதிற்குமேற்பட்ட ஓர் கிழவனையே மணக்க நேரிடுகிறது. ஏன்? அவன்தான் பெண்ணின் பெற்றோர்களுக்கு தக்க பணம் கொடுப்பவன், இளைஞர்களோ அவ்வளவு கொடுக்க ஒருப்படார்கள். (கொடுக்கவும் முடியாது) உதாரணமாக, ஓர் வாலிபனும், ஓர் பணம் படைத்த கிழவனும் ஒரே பெண்ணைக் காதலிக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். இவர்களில் யாரை அப்பெண் காதலித்தாலும், முடிவில் அப்பெண்ணை கிழவனே அடைவான் என்பதற்கு கிஞ்சிற்றும் ஐயமில்லை. ஏன்? அவனே (கிழவன்) பணம் படைத்தவனாகவும், ஜனச்சேர்க்கையுள்ளவனாகவும் இருக்கின்றான், வாலிபனோ, ஏழையாகயிருக்கின்றான். "பணம் பத்தும் செய்யும்" என்னும் பழமொழிக்கிணங்கி முன்னவன் நினைத்தால் முடியாத தொன்றல்ல, பின்னவனோ வாலிபம் ஒன்றைத் தவிற எவ்விதச் செயலும், செய்ய முடியாதவனாக இருக்கின்றான். பெண்ணும் இளைஞனையே காதலித்தாலும், அவள் பெற்றோர்கள், பணம் ஒன்றிலேயே, குறிப்பாக உள்ளார்கள் ஆகவே கண்டிப்பாக, அப்பெண் தாய் தந்தையர்கட்கு, கட்டுப்பட்டு அக்கிழவனையே மணக்க நேரிடுகிறது.

அடுத்தபடியாக கல்யாணம் செய்த தம்பதிகளை எடுத்துக்கொள்வோம். கல்யாணம் ஆகி சிறிது காலம் (இரண்டு மூன்று மாதம்) சென்றதும் தனது அருமை மனைவியை விடுத்து தூரதேசமாகிய இச்செய்கோன் முதலிய நாடுகளுக்கு புறப்பட்டுவிடுகிறார்கள். இங்கு இவர்கள் மூன்றாண்டு வதிந்து திரும்பும்வரை அப்பெண்ணின் நிலைமை சொல்லுந்தரத்ததன்று மாமி, த்திகளுக்குப்பயந்து நடக்க வே· மதப்பித்தவழி ஏதோனும் ஒரு குற்றஞ் செய்து விட்டாலோ, அன்று அவள் பாடு பெரிய கஷ்டமாக முடிவதோடு, அம்மாமி நாத்திகள், பெண்ணின் உயிருக்கே உலை வைத்து விடுகிறார்கள். இவர்களை விடுத்து தூரதேசஞ்சென்ற ஆண் மகனைக்கவனித்தாலோ இங்கு அவன் மூன்றாண்டுகளும், சும்மாவா இருக்கமுடியும், இயற்கை இன்பத்தை அடக்க முடியாது. எத்தனையோ பேர் விலைமாதர்களின் வலையிற் சிக்கி பலவித வியாதிகளாகி கஷ்டப்படுகின்றார்கள். உதாரணமாக ஓர் வாலிபன் ஒரு முதலாளியிடம் சம்பளம் பேசிக்கொண்டு, சேவுகாவிர்த்திக்கிச் செல்கின்றானென வைத்துக்கொள்வோம். அவன் சென்ற சுமார் ஐந்தாருமாதங்கட்கெல்லாம், அவனது மனைவி இறந்துவிடுகின்றாள், உடனே அம்முதலாளியாகிய பெரியவர்தானே பணம் (கடனாக) உதவிசெய்து அவனுக்கு கல்யாணம் பேசி முடிவுசெய்துகொண்டு அவனை வரவழைத்து கல்யாணமும் செய்து வைக்கிறார். கல்யாணம் முடிந்து ஒரே மாதந்தானையா, முதலிலாளி வருகிறார், என்ன சேதி தம்பி புறப்பாடு, அங்கு கடையில் ஆளில்லையென்று, கடிசுபண்ணுகிறார், வாலிபனும் பார்க்கிறான், வேறு வழி இல்லை, புறப்படமாட்டேனென்றால் வாங்கிய கடனை உடனே திருப்பிக்கொடுக்கவேண்டும், என் செய்வான் ஏழை வாலிபன், மறுபேச்சின்றிப்புறப்படுகின்றான் பாருங்கள், மனைவி காலஞ்சென்ற, மறுமாதத்திலேயே, கல்யாணம் செய்து அவன் கண்ட சுகம்தானென்னே? அப்பெண்கண்ட சுகம் தானேன்னே? அப்பெண்ணும் இயற்கையின் தலைமையுடன் சண்டைக்கி நின்றாலல்லாது, அவனது கற்பைக் காத்துக் கொள்வது எங்ஙனம்? தீரயோஜியுங்கள். இவ்விதமே பல விடங்களிலும், நடைபெறுவதை சர்வ சாதாரணமாக காணலாம்.

விதவைகளை எடுத்துக்கொண்டாலோ சொல்லமுடியாது அம்மம்ம! கொடுமை! கொடுமை!! அதனினும் கொடுமை வேறொன்றிலது. கல்யாணம் செய்து இரண்டோர் ஆண்டுகளில், கணவனைப்பறிகொடுத்த விதவைகள் ஆனந்தம் அவர்கட்கு மறுமண உரிமையும் கிடையாது. அவர்களைக்கண்டாலும் தோஷம், ஓர் காரியமாக ஓர் இடத்திற்குப்போகும் போது, அவர்கள் எதிர்ப்பட்டால் முண்டச்சி எதிர்வருகிறாள், காரியம் கைகூடாதென வாய்ப்பறை சாற்றுகின்றார்கள். நீங்கள் பணம் தேடச்செல்லும், தேசங்களாகிய பர்மா, மலேயா முதலிய நாடுகளில், ஒரு தினத்தில் எத்தனைவிதவைகளைச் சந்திக்கின்றீர்கள் அங்கு உங்கள் காரியம், கைகூடுகின்றதா, கூடவில்லையா, இதற்கு தக்கபதில் தருவீர்களாக. இங்கு நீங்கள், அவர்களின் ஆடையாபரணம் முதலியவைகளை பலவந்தத்துடன் பிடுங்கிக்கொண்டு ஓர் வெள்ளைப்புடவையைக்கொடுத்து இதுதான் உனக்கு (கடவுள்) ஏற்படுத்தியது யென்று சொல்லி அவர்களையும் அணியச்செய்வதல்லவா, நீங்கள் அவர்களை விதவைகளென்றும் சுமங்கிலி, என்னும் அறிவதற்கு எதுவாக இருக்கிறது. எங்கே ஓர் இளம் விதவைக்கி, நல்ல பனாரஸ் பட்டுப்புடவை கொடுத்து கட்டச்செய்து ஆபரணங்களையும் பூட்டிப்பாருங்கள் அப்போது அவ்விதவை உங்கள் கண்களுக்கு எப்படித்திகழ்கின்றார்கள் என்பதை உணர்வீர்கள்.

ஆகவே இவ்வித மூடச்செய்கைகளைப்போக்கவேண்டுமென்று சுயமரியாதைக்காரர்களாகிய நாங்களும் எங்கள் பத்திரிகைகளும் கூறுவதில் என்னய்யா தவறு இருக்கிறது.

செட்டியார் நாட்டிளஞ் சிங்கங்களே! வீரப்பெண்மணிகளே! நாம் இதுவரை உறங்கிக்கொண்டிருந்தது போதும் இனியும் மூடத்தாய் தந்தையர்களின் கட்டுப்பாட்டுக்கு பயந்துகொண்டிருக்க வேண்டியதில்லை. தைரியத்துடன் வெளியில் வாருங்கள். ஆணும் பெண்ணும் சமம் என்பதை செயலில் செய்து காண்பியுங்கள்.

———


## மதனுகமம்

(புதுச்சேரிப் பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம்
தர்மராஜா கோவில்வீதி, புதுச்சேரி.

## கொக்கோகம்.

மூலமும் உரையும்-காலிகோபயின்ட் 64 வகை சிற்றின்ப அசல் கிலேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும், தனி மாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு, விலை ரூ. 5. வெளிநாட்டினர் ரூ. 5—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G. பாக்கியம் & கோ.,
வேப்பேரி, சென்னை.

# புதுவை சுயமரியாதைத்திருமணத்தில் மணமக்களுக்கு, தோழர் பாரதிதாசன் வாசித்த வாழ்த்துப்பத்திரம்.

உலகினிற் பழஞ்சீர் இலகிய இந்தியா
விழிமூடிற் றெனும் பழிமூடா வண்ணம்
மக்களே எழுக வாழ்வினில் உயர்க
என்றுணர் வளிக்க எழுந்ததெம் இயக்கம்
அவ்வியக்கத்தின் அருமை கூறிடில்
இருளிற் சுடராய் எழுந்த தென்போம்
வற்றிய நெஞ்சில் வற்றிய தோளில்
வயிரத் தன்மை வழங்குவ தென்போம்
பாரத நாட்டை வீரர்தம் நாடாய்ப்
புரியுந் தன்மை பூண்ட தென்போம்
நயக்கொள் அவ் வியக்கம்தன்னை நாங்கள்

சுய மரியாதை இயக்க மெனச்சொல்வோம்.
அந்த இயக்கம் அறைவ தென்னவெனில்
எல்லாரும் ஓர்குலம் எனப்படல் வேண்டும்
எல்லாரும் இந்தியர் எனப்படல் வேண்டும்
எல்லாரும் பொதுவாய் இன்புறல் வேண்டும்
உயர்வு தாழ்வுகள் ஒழிந்திட வேண்டும்
பெண்கள் விடுதலை பெற்றிட வேண்டும்
கைம்மைக் கொடுமை களைந்திட வேண்டும்
காதல் மணமே காணுதல் வேண்டும்
பகுத்தறிவுச் செயல் பரவுதல் வேண்டும்
மூடச் செயல்கள் முறிபடல் வேண்டும்
யார்க்கும் கல்வி ஈந்திடல் வேண்டும்
தொழிற்கல்வி எங்கும் தோன்றிடல் வேண்டும்.

ஒருவனை ஏய்த்துமற் றொருவன் உண்ணும்
இருதயந் தன்னில் எரிமூட்ட வேண்டும்
சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவ மெனும்
இதந்தரும் பதவி எவர்க்கும் வேண்டும்
எழுபது கோடித் தடக்கைகள் இருந்தும்
எழுபது கோடிச் சுடர்விழி யிருந்தும்
குளிர் முப்பத்தைந்து கோடிமுகம் பூண்டும்
நீடுமுப்பத் தைந்து கோடிவாய் நிறைந்தும்
பாரத நாடெனும் பழம்பெருந் தேவிதான்
ஒற்றுமை உணரா ஒரே காரணத்தால்
அங்கம் சிதைப்பட் டழிதல் நன்றா?
என்றுதான் சொல்லிற் றெங்கள் இயக்கம்.

இயக்கம் சொன்ன இவற்றை யெல்லாம்
மயக்கம் கொண்டு மறுப்பது தகுமா?
கடவுளின் பெயரால் கடிவது முறையா?
மதப்பெயர் சொல்லி மறுப்பது சரியா?
ஜாதியைச் சொல்லித் தவிர்ப்பது நன்றா?
வழக்கம் எண்ணி ஒழிப்பது நெறியா?
சடங்கைச் சொல்லித் தடுப்பது நீதியா?
குருக்கள் சூழ்ச்சியால் குலைப்பது ஞாயமா?
ஆச்சாரி மெச்ச அழிப்பது தர்மமா?
பார்ப்பனர் தூண்டலால் பகைப்பது பெருமையா?
மகந்துகள் சூழ்ச்சியால் மாய்ப்பது வண்மையா?

உயர்ந்தஎம் இயக்க உண்மை கண்டு
தெளிந்த சிந்தையோர் நன்றென ஒப்பினர்
பகுத்தறிவாளர்கள் மகிழ்ச்சியோ டேற்றனர்
நாட்டிலன்புடையார் கேட்டு வியந்தனர்
ஆயிரமக்கள் அறிவியக்கம் என்றனர்
பல்லாயிரவர் பயனுடைத் தென்றனர்
லக்ஷக்கணக்கினர் பக்ஷத்தால் ஆர்த்தனர்
ஆயினும் சிலபேர் தீயதென்கின்றனர்
சிற்சில பேர்கள் சிந்தை நொந்தனர்
இன்னும் சிலபேர் எதிர்த்திடுகின்றனர்
மற்றும் சிலபேர் வைதிடுகின்றனர்
அன்பற்ற சிற்சிலர் அடிக்கவும் செய்தனர்
எம்மியக்கத்தை எதிர்த்திடுவோரை
நாமின்று சில ஞாயங்கேட்போம்
உங்கள் ஆஸ்திகம் உங்கள் வைதீகம்
உங்கள் கடவுள் உங்கள் கோயில்
உங்கள் குருக்கள் உங்கள் ஐயர்
உங்கள் மந்திரம் உங்கள் வேதாந்தம்
உங்கள் யோகம் உங்கள் யாகம்
உங்கள் விரதம் உங்கள் பூசனை
உங்கள் சடங்குகள் உங்கள் மடங்கள்
இவைகள் இதுவரை என்னசெய்தன?
ஆயிரம் ஆண்டாய் அசைத்த தென்ன?
இலக்ஷம் ஆண்டாய் ஈந்ததென்ன?
ஓர்யுகமாக உருட்டியதென்ன?
சதுர்யுகமாகச் சாய்த்ததென்ன?

பசியால் மக்கள் பறக்கின்றாரே
நோயால் மக்கள் நொடிக்கின்றாரே
தொழிலின்றி மக்கள் சோர்கின்றாரே
வாணிபம்கெட்டு வதைகின்றாரே
கல்வியின்றிக் கலங்குகின்றாரே
ஆடையின்றி அலைகின்றாரே
வீடின்றி மக்கள் வெதிக்கின்றாரே
பரதேசம்சென்று பதைக்கின்றாரே

அண்டைவீட்டினர் அரிப்பார் என்றும்
பக்கத்துள்ளார் பழிப்பாரென்றும்
எதிர்த்த வீட்டினர் இளிப்பார் என்றும்
பின் வீட்டார்கள் பிதற்றுவார் என்றும்
சாதியார் சனங்கள் சபிப்பர் என்றும்
நாட்டாண்மைக்காரர் கேட்பார் என்றும்
பெரியதனக்காரர் பேசுவாரென்றும்
பாவம்வந்து பாயும் என்றும்
நரகம் வந்து நலிக்கும் என்றும்
சனியன்வந்து சாரும் என்றும்
தோஷம்வந்து தொலைக்குமென்றும்
குருக்கள்வந்து கூவுவாறென்றும்
கிழவர்வந்து கேட்பாரென்றும்
பொன்னியக்கத்தைப் பின்பற்றாதிருப்பதா?
இதோபாருங்கள் எமது தோழர்
மன்னும் பெருமைப் பொன்னுசாமியின்
செல்வரான சிவசங்கரனும்
கதாஸ்தர்வேலை எதார்த்தவாதி
கோபாலன்பெற்ற குணவதியான
திருநிறைச்செல்வி கிருஷ்ணவேணியும்
உருவோங்கியசீர்த் திருவேங்கடனார்
பண்புசேர் செல்வி பவுனம்பாளும்
கோபாலன் பெற்ற பூபாலன் ஒத்த
நேசமிக்க கேசவன்தானும்
சுயமரியாதைத் தூய இயக்கத்
திருமணம்கண்டு பெருமக்களுக்கு
நன்னெறிகாட்ட முன்வந்தார்கள்
வீரப்பெண்கள் வீரக்குமரர்கள்
ஆரும் இன்பால் அகிலத்தில் வாழ்க!
மணமக்கள் பெற்ற குணமிக்க சுற்றத்தார்
உயர்வுற வந்தவர் தூய
சுயமரியாதை இயக்கம் வாழியவே.

## அறிவிப்பு.

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலூக்கா பேரளம் கடைதெருவில் வியாபாரம் செய்து வரும் ச. வை. குப்புசாமித்தேவர் என்பவர் தனது பெயருக்குப்பின்னால் தனது வகுப்பை குறிக்கும் தேவர் என்னும்பட்டப்பெயர் உபயோகித்து வந்ததை இன்றுடன் நிறுத்திவிட்டதோடு இதற்குமுன் இப்பட்டபெயரோடுஎழுதப்பட்டுஇருந்து வரும்சகல தஸ்தாவேஜிகளும்யாதொருவிதத்திலும்மாறுதல் இல்லாமலே வரவுசெலவுநடந்துவரும் என்று தெரிவித்துக்கொள்கிறார்

ச. வை. குப்புசாமி
ஜெனரல் மர்ச்சென்ட் பேரளம்.

# நாஸ்திக வளர்ச்சி.

## பிரசாரத்தின் தீவிரப்போக்கு.

பிரிட்டனில் நாஸ்திக பிரசாரத்தை வெகு தீவிரமாகச் செய்து வருமாறு போல்ஷ்விக் அதிகாரிகள், இங்கிலாந்திலுள்ள பொது உடமைக் காரர்களுக்கெல்லாம் உத்தரவு அனுப்பியிருப்பதாக பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் பத்திரிக்கைகள் கூறுகின்றன.

மத ஸ்தாபனங்களை கடுமையாகத் தாக்குமாறு மாஸ்கோவிலிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. பொது உடமை பிரசாரத்தையெல்லாம் விட்டுவிட்டு, நாஸ்திக பிரசாரத்தையே தீவிரமாக நடத்துமாறு சோவியத் அதிகாரிகள் உத்தரவிட்டு விட்டனர்.

ஏர்ல் ஆப் கிளாஸ்கோ இதைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்:—

'இதனால் பிரிட்டனுக்கு மிகுந்த ஆபத்து தோன்றி யிருக்கிறது. கடவுளுக்கு பயந்து நடக்கும் ஜனங்களுக்கு, சர்க்கார் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

பிராடஸ்டண்டு கிறிஸ்துவ சங்கத்திடம், பொதுவுடமைக்காரர்கள் தீவிரமான நாஸ்திக பிரசாரத்தில் இறங்கப் போகிறார்கள் என்பதற்கு போதுமான சாக்ஷியம் இருந்து வருகிறது.

பிரிட்டிஷ் பொதுவுடமைக்காரர்களின் கட்சி கட்டுப்பாடாக அமைந்திருக்கிறது. இவர்களுக்கு ஏராளமான பணமும் வந்து கொண்டிருக்கிறது. உலகம் எங்கும், பொது உடைமைக்காரர்கள் கட்டுப்பாடாக, தீவிரமான நாஸ்திக பிரசாரத்தில் இறங்கிவிட்டனர்.

சதுர்வித உபாயங்களாலும் தங்களுக்கு தெரிந்த எல்லா விதமான தந்திர வழிகளாலும், மதத்தை கேலி செய்து, கேவலப்படுத்துவதே இவர்களது நோக்கம். மதத்தினால் புராதன காலங்களில் நடந்த கொடுமைகளையும், மதத்தின் பிற்போக்கு தன்மையையும், இவர்கள் சாதுர்யமாக ஜனங்களுக்கு சுட்டிக்காட்டுகின்றனர். விநோதப் படங்கள் மூலமாகவும், நாஸ்திக நாடகங்கள் மூலமாகவும், சுவரொட்டி விளம்பரங்கள் மூலமாகவும் சினிமாக்களின் மூலமாகவும் மதத்தை பரிகாசம் செய்து வருகின்றனர்.

பெக்சிலான்சி என்னுமிடத்தில் பொது உடைமைக்காரரின் கோடைகால பள்ளிக்கூடம் நடந்தது. நடுக்கடலிலிருக்கும் கப்பல் படையொன்றில் உள்ள மாலுமிகள் கலகம் செய்வதைப்பற்றியுள்ள ஒருபொது உடைமை சினிமாப் படத்தை இங்குபொது ஜனங்களுக்கு காட்டினார்கள்.

இங்கிலாந்தில் சுமார் 50 பெரிய நகரங்களில் நாஸ்திக சங்கங்களை ஏற்படுத்த பொது உடமைக்காரர்கள் திட்டம் போட்டிருக்கின்றனர். ஆரம்ப பள்ளிக்கூடங்களிலும், துறைமுக நகரங்களில் தங்கும் மாலுமிகளிடையேயும் நாஸ்திக பிரசாரம் செய்ய தீவிரமான முயற்சிகள் நடந்து வருகின்றன. தடுக்கப்பட்ட படங்களை பலகிராமங்களில் சினிமா படங்களாக காட்டி வருகின்றனர். பிரிட்டிஷ் உபாத்தியாயர்களை நாஸ்திக சங்கங்களில் சேர்க்க அதி தீவிரமுயற்சி நடந்து வருகிறது.'

# சத்தியாக்கிரகமா?

# சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

—:0:—

ANANGARANGABATIKA.

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY

and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.


Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**

***Chandanpur,***

**(Khulna) E. B. R.**

3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஒட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்கு வோருக்கு; கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனமாய் கொடுக்கப்படும். இனம் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency

15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

டாக்டர்

சிங்காரம் அவர்களின்

மஹா சந்தனாதித்தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது

கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் அரிப்பு
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேக நீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கை கால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்திகாங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி

பீனிசம்
தலை மயக்கம்
தலைப் பொடுகு
சொரி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்
முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
12 „ „ ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

ணமாக ஓர் ஆலையில் 1000 தொழிலாளிகள் வேலைசெய்கிறார்களென வைத்துக்கொள்ளுங்கள். அவர்களுடன் மேஸ்திரிமார்களும், சூப்பர்வைஸர்களும், ரைட்டர்களும் சேர்ந்திருக்கிறார்கள். ஏனெனில் பொதுவுடமை வாழ்வில் தொழிலாளி முதலாளியென்று பேதமே இருக்கமுடியாது. இத்தொழிலாளிகளில் ஆடவரும் பெண்டிரும் பெரும்பாலும் கலந்திருக்கவே ஏற்படும்.

இவர்கள் காலையில் 6 30 மணிக்கு தொழிற்சாலைக்குப் போவார்களானால், காலையில் 6 மணிக்கெல்லாம் இந்த 1000 பேர்களுக்கும் உணவு வேண்டும். மத்தியானம் 11 மணிக்குச்சாப்பாடு வேண்டும், இம்மாதிரி வேண்டியிருக்கும் பொழுது தொழிலாளிகள் வீட்டில் ஒருவர் சமையல் செய்யவும், இன்னொருவர் சமையலுக்கானசாமான்கள் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்க என்பதில்லாமல் இருக்கவேண்டும். ஏனெனில் தொழிலாளர்களுக்குத் தங்கள்வேலையைத்தவிற வேறெவ்விதக்கவலையுமிருத்தல் கூடாதென நாம்முன்னரே கூறியுள்ளோம்.

ஆலையில் நாட்டின் நலன்பேணி வேலைசெய்யப்போகும் தொழிலாளரைப்போன்ற, இத்தொழிலாளர்களுக்குச் சாப்பாடிடும் தொழிலைமேற்கொள்ளும் ஓர் தனி இலாக்காவும் பொதுவுடமை வாழ்விலிருக்கும். அதிலும் ஆண்களும் பெண்களும் கலந்தே தொழில்செய்வர். அந்த உணவு இலாகாவில் தயாரிக்கப்படும் உணவை எவ்வகை பேதமுமின்றி, தொழிலாளரும், மேஸ்திரிகளும், ரைட்டர்களும், சூப்பர்வைஸர்களும் உண்ணுவர். பின்னர் தொழில்செய்வர் பின்னரும் உணவுவேலையில் இவ்வாறே உணவளிக்கப்படும்

## உடை.

மாலைவேளையில், அவர்கள் தரித்துக்கொள்வதற்கான உடைகளும், மற்றும் கோடைகாலம், மாரிக்காலம் பனிக்காலம், முதலிய காலங்களில் தரித்துக்கொள்ளுவதற்கான உடைகளும் எல்லோருக்கும் பொதுவாகப் போதுமான அளவு கொடுக்கப்படும் அந்தவேலையைக்கவனிக்க அதற்கென துணிசப்ளை இலாக்கா தனியாகவேலைசெய்யும்.

## குடியிருப்பு.

தொழில்செய்த நேரம்போகக்குடும்பத்துடன் வசிப்பதற்கென வீடுகள் எவ்விதம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்? வீட்டிலுள்ள சிறுவர் சிறுமியர்கள் பாடசாலைகளைச்சேர்ந்த ஹாஸ்டல்களிலேயே தாமதிப்பர். ஏனெனில் சிறுவர் சிறுமியாது சுற்றுப்புரகவனம் பிறவற்றில் ஈர்க்கப்படாது கல்வியிலேயே பதிந்திருக்கவேண்டும் அத்துடன் வெளியில்உள்ள துஷ்டர்களுடைய சகவாசம் அவர்களுக்குக்கில்லாதிருக்கும். எனவே மாணவர்களுக்குக்கல்வி கற்பிக்குமிடம், ஒய்வெடுத்துக்கொள்ளுமிடம், முதலிய எல்லாம் பள்ளிக்கூட கட்டிடத்துடனேயே அமைக்கப்பட்டிருக்கவேண்டும். அவர்களுக்கான, துணி மணிகளும், வைத்திய வசதியும் அங்கேயே சித்தமாயிருக்கும். இதற்கிடையில் பெற்றோரும் பிள்ளைகளும் சந்தித்துக்கொள்ளவும் வசதியிருக்கும்.

எனவே தங்கள் குழந்தைகளைப் பற்றிக்கவலையே இன்றி தொழிலாளர் சந்தோஷமாகவிருப்பர். அவர்கள் குடும்பத்திலிருக்கும் நபர்களின் எண்ணிக்கைக்குத்தக்கபடியான இடவசதி அளிக்கப்பட்டிருக்கும். உதாரணமாக, ஏ. என்பவர்தான் மனைவியுடனும், தாயாருடனும், தகப்பனுருடனும் வசிப்பாரானால், அந்த நான்கு பேரும் வசிக்கத்தகுந்த, போதிய அளவு இடமுள்ள வீடு அவருக்குவிடப்படவேண்டும், அடுத்த ஓர் பி. என்பவர் மனைவியும் வேறுயாருமின்றி தனியாக இருப்பாராயின், ஓராள்மட்டில் புழங்கப்போதுமான அளவுள்ள இடவசதி அவருக்களிக்கப்படல் வேண்டும். அந்த ஏ. என்பவர் ஓர் ஆலையில் வேலைசெய்யும் சாதாரண தொழிலாளியாக விருப்பினும், இந்த பி. என்பவர் அத்தொழிற்சாலையின் மானேஜராக விருப்பினும் இந்த முறையே கையாடப்படவேண்டும்.

இந்த பி. என்பவர்சற்று அறிவு பெற்றவர் அவர் மானேஜர்தான் அந்த ஏ. என்பர் கல்வியறிவற்றவர், தொழிலாளயாக விருக்கிறார். தொழிலாளிதான். ஆனால் மனிதனுக்கு வேண்டிய இயற்கையான காற்றும் இடவசதியும் இந்தமானேஜருக்கு வேண்டியது போலவே அந்தொழிலாளிக்கும் வேண்டுமல்லவா? இந்த மானேஜர் தனிநபர் 15 சதுரஅடியுள்ள அளவு அவருக்கு அதாவது ஒரு தனிநபருக்கு அவசிய மென்று சுகாதார அதிகாரிகளுதுவாரானல் அப்படியே 15 சதுர அடி விஸ்தீரணமுள்ள இடம் அவருக்குத்தரப்படும் அதுபோலவே இந்தத்தொழிலாளியுடன் மற்றும் மனைவி, பெற்றோர் இவர் ஆக 4 பேர் வசிக்கவேண்டுமாதலின் 4X15—60 சதுர அடிகொண்ட ஓரிடம் இவர்களுக்கு ஒதுக்கப்படவேண்டும். மனிதனுக்கு வேண்டிய சுகாதார வசதிகள் எவையெனக் கருதப்பட்டு, அந்நாட்டிலுள்ள எந்த ஒரு உயர்ந்த உத்தியோகஸ்தனுயினும்அந்த மனிதனுக்கு அமைக்கப்பட்டிருக்கும் சுகாதார வசதிகளனைத்தும் இந்த தொழிலாளி யென்னும் மனிதர்களுக்கும் அந்த வீடுகளில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அந்த உத்தியோகஸ்தரும் இந்தத்தொழிலாளியும் மனிதர்கள் இங்கு நாம் மனிதருக்கு வேண்டிய சுகாதாரவசதிகள் என்றே பேசுகின்றோமாதலின், மனிதர்களாகிய அந்த உத்தியோகஸ்தனுக்கும் இந்தத்தொழிலாளிக்கும் இவ்விதி பொருந்துமன்றோ?

## வைத்திய வசதி.

நோய்வாய்ப்பட்டு வைத்தியம் செய்து சுகப்படபணமில்லாமல் சாகும் தற்காலத்திய நிலைமையைப்போல் பொதுவுடமை வாழ்விலிராது. ஒரு தொழிலாளிக்கு நோயென்றால், அந்தத்தொழிற்சாலையிலுள்ளோரைக் கவனிக்கவென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் டாக்டர் அந்தத்தொழிலாளியைக்கவனிப்பார். எவ்விதமான நிபந்தனையுமின்றி அந்தத்தொழிலாளிக்கு மருந்தும், அதற்கேற்ற உணவும் ஓய்வும் அளிக்கப்படும். அவரைகவனித்துக்கொள்ள ஆட்களும் அவ்வாஸ்பத்திரியிலேயே கிடைக்கும். ஏனெனில் அந்தத்தொழிலாளியும் அந்நாட்டின் சொந்தக்காரர் ஆகையினால் தான்.

## சம்பளம்?.

ஒரு தொழிலாளிக்கு, அவரது சக்திக்கியன்றவேலை, உண்ணப்போதுமான உணவு, உடுக்கப்போதுமான உடை, இருக்கப்போதுமானவீடு, போதுமான சுகாதாரவசதி, ஓய்வு, வைத்திய உதவி, பிள்ளைகளுக்குக் கல்வி, உணவு உடை முதலிய எல்லாம் கிடைப்பதாயிருக்கையில், அவர்களுக்குச்சம்பளம்பெறுவதைப்பற்றியஎண்ணம் என்உண்டாகவேண்டும்?

இந்த முறையில் அந்நாட்டின்குடியாட்சித்தலைவருக்கு எவ்விதஉரிமைகளும் வசதிகளும் இந்தத்தொழிலாளிக்கும் கிடைப்பதாயிருக்கையில் அவர்கள் சம்பளமுறையை விரும்புவார்களானல், ஓர்தொழிலாளிக்குக் கிடைக்கும் சம்பளத்தைவிட ஓர்கலெக்டருக்கு அதிகமாகக்கிடைக்க வேண்டும். அப்பொழுது சொற்பஊதியம்பெற்ற இத்தொழிலாளி அடைய முடியாத பலசௌகரியங்களை அந்தக்கலெக்டர் தனதுஅதிக சம்பாத்தியத்தால் அடையக்கூடும். எனவே இந்த ஏற்றத்தாழ்வான,— மக்களுள் பேதம் காட்டத்தக்க,— இந்தச்சம்பளத்திட்டத்தைவிட முற்கூறிய பொதுவுடமைத்திட்டமே சாலச்சிறந்ததும்—தொழிலாளிகளாலும் விரும்பத்தக்கதென்பதும் நன்கு விளங்குகிறதல்லவா?


# ஹிமகிரி தைலம்.

## ஸ்நானத்திற்கு ஏற்றது.

உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ் முட்டன்று பி. டூ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக்கொண்டு செய்யப்பட்ட விலைசகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக்கூடியதாயிருக்கிறது. பொதுஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

## ரத்னமிஸ்ரிஹல்வா

—:0:—

மூளையையும், உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயடு,
மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.


மதம் மதமென மதிகெட்டலையாதே.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
5. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
6. சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... 0—4—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—C
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோசம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைகொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

**மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S. I.**

## "பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"

# "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



# Goshaye office pillss.
# கோஷாயி ஆபீஸ் மாத்திரை

——::——

சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அறிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லறவாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினால் முாணுகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல். மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல்வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுள்ளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். சுரம், தைலஸ்னனம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக்கூடிய **கோஷாயி ஆபீஸ் மாத்திரை** 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

டாக்டர் T. K. வெங்கடாசலம்
[கால்ராபைரி]
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உளள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்,
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமைய்யாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.